# மாதவைமித்ரன்

புஸ்தகம் 1        எண் 4

[illegible] 1936

208168

ரூ. 3. Regd. No. M. 2419



# மாத்வ மித்திரன்.

# THE MADWA MITHAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.



| Vol. 9. | தாத்ருநாம ஸம்வத்ஸரம். | No. 4. |
|---|---|---|
| புஸ்தகம் 9 | ஆசுவீஜ மாஸம். | தெ. 4. |
| | (14—11—36) சனிவாரம். | |



| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீ மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 97 |
| 2. | ஆசாரமாலை | 107 |
| 3. | ஸ்ரீமத்வ விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்) | 109 |
| 4. | விதவா விவாக கண்டனம் | 113 |
| 5. | கேசவாதி ரூபங்களின் விபரம் | 117 |
| 6. | மஹிஷாஸுரமர்த்தனியின் கதை | 119 |
| 7 | மத்வமதக்ஞானம் துர்லபம் | 124 |
| 8. | அணுபாஷியம் | 126 |
| | விசேஷ தினங்கள் | 128 |

யர்:— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி ஸ்ராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்

மானேஜர் மாத்வமித்திரன்,
ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

**மாத்வமித்திரன் பழைய வாலியங்கள்**
**வெகு சொற்பம்தானிருக்கின்றன.**
**உடனே அவைகளைப்பெற**
**முந்துங்கள்.**

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

# மாத்வ மித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 9 | தாத்ரு நாமஸம்வத்ஸரம். ஆசுவீஜ மாஸம். | NO. 4

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

### இருபத்தி ஆறுவது அத்தியாயம்.

ஸ்ரீமு. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.

(முன் 72ம் பக்கம் தொடர்ச்சி, காபிரைட்.)

அவ்வாறே கடோத்கசன் கர்ணனை அழைத்து அவனோடும் அவனுக்கு சகாயமாய் வந்த துரோணாசாரியாருடன் கூடிய துரியோதனாதிகளோடும் யுத்தம் செய்தான். இவர்களை கடோத்கசன் சகாயமில்லாமலிருந்து தடுத்தான். அதிகமாய் ஹிம்சித்தான். பலிஷ்டனான கடோத்கசனால் துரோணாசாரியார் முதலானவர்கள் அநேகம் தடவை சங்கடப்பட்டவர்களாய் கர்ணனை முன்னிட்டுக் கடோத்கசனிடம் யுத்தம் செய்தார்கள். மகத்தான அஸ்திரங்களை தெரிந்தவனான கர்ணன் தன் வீரியத்தை ஆசிரயித்து அந்த ராத்திரி யுத்தத்தில் பயப்படவில்லை. அப்பொழுது பீமசேனர் அசுவத்தாமாவையும் அர்ஜுனன் ஸுசர்மா முதலான திரிகர்த்தர்

களையும் தடுத்தார்கள். அப்பொழுதுதான் அலம்பலன் என்னும் ராக்ஷஸன் கடோத்கசனைக்கொல்ல வந்து சேர்ந்தான். அப்பொழுது கடோத்கசன் அலம்பலனுடன் யுத்தம் செய்து அவனை பூமியில் தள்ளி கத்தியைக்கொண்டு அவனுடைய தலையை சேதித்து அந்த அலம்பலனுடைய தலையை துரியோதனனிடம் போட்டான். கடோத்கசனுடைய பராக்கிரம விஷயத்தில் எல்லா சத்ருராஜர்களும் விசனமடைந்தனர். பிறகு க்ரூரமான வீரியமுள்ள அலாயுதன் என்னும் ராக்ஷஸன் யுத்தத்திற்கு வந்து சேர்ந்தான். கடோத்கசன் அவனுக்கு எதிராக அபிமுகமாய் வந்தான். ஓர் முகூர்த்தகாலம் அந்த அலாயுத ராக்ஷஸனுடன் யுத்தம் செய்து அவனை பூமியில் வீழ்த்தி கடோத்கசன் யுத்தமாகிற யக்ஞத்திற்கு பசுவாய்ச்செய்து கொன்றான். பிறகு கடோத்கசன் அலாயுதனின் தலையை சேதித்து அதை கோபத்துடன் துரியோதனின் மார்பில் விட்டெறிந்தான். அதைப்பார்த்து துரியோதனாதிகள் எல்லோரும் பயப்பட்டார்கள். கடோத்கசனுடைய பலத்தை பிரசித்தப்படுத்துவதற்காக ஸமர்த்தரான பீமசேனர் யாரை ஸம்ஹரிக்கவில்லையோ அப்பேர்ப்பட்ட அலாயுதாஸுரன் கடோத்கசனால்கொல்லப்படவும் துரியோதனாதிகள் எல்லோரும் கர்ணனைப்பார்த்து, ஹே கர்ணா! உன்னிடமுள்ள இந்திரனின் சக்தி ஆயுதத்தை கடோத்கசனிடம் ப்ரயோகம் செய். கடோத்கசன் இருந்தால் சத்ருவின் எல்லா சைனியங்களும் இறந்த மாதிரிதான். அர்ஜுனன் எங்களுக்கு என்ன செய்யபோகிறான் என்று சொல்லி ப்ரேரிபித்தார்கள். கடோத்கசனால் மிகவும் அதிகமாய் ஹிம்ஸிக்கப்பட்ட துரியோதனாதிகளால் இவ்வாறு அடுத்தடுத்து தூண்டப்பட்டவனும், கடோத்கசனால் ஸ்வயம் தானே மிகவும் ஹிம்ஸிக்கப்பட்டவனுமுள்ள கர்ணன், இந்திரனுக்கு பிரியமானதும் மகத்தானதுமான சக்தி ஆயுதத்தை எடுத்துக்கொண்டான். யமனின் நாவுக்கு சமானமாயுள்ளதும் திக்கு விதிக்குகளை மிகவும் பிரகாசிப்பதாயுமுள்ள அந்த இந்திரசக்தியை ஆகாயத்திலிருந்துவரும் பர்வதம் போலுள்ள இணையற்ற பராக்கிரமம் படைத்த கடோத்கசனிடம் [illegible] அந்த சக்தியால் ஹிருதயம் பிளந்தவனாய் கடோத்கசன் சத்ரு ஸைனியத்தில் விழுந்தான். இறந்துபோயும்

2081 68



கடோத்கசன் சத்ரு ஸைனியத்தைப் பொடியாக்கினான். அவன் பிராணனை விடவும் துரியோதனாதிகள் சந்தோஷமடைந்தனர். விசேஷமாய் கர்ஜனை செய்தனர். வஸ்திரங்களை மேலே வீசினார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணர் குதித்து சந்தோஷித்தார். அர்ஜுனனைத் தழுவிக்கொண்டார். ஸிம்ஹநாதம் செய்தார். தன் பாஞ்சஜன்ய சங்கத்தை ஊதி உரக்க சப்தித்துக்கொண்டு சிரித்தார். ப்ரபுவான கிருஷ்ணா! எங்கள் ஜ்யேஷ்டபுத்திரனும் வீரனுமுள்ள கடோத்கசன் பிராணனை விடவும் நீ ஏன் சந்தோஷமடைந்திருக்கிறாய். என்ன இது, என்று அர்ஜுனன் மனம் துக்கமடைந்து ஸ்ரீ கிருஷ்ணரை ப்ரச்னம் செய்தான். ஹே அர்ஜுனா! தெய்வ இச்சையால் நீ பிழைத்தாய். உன்னைக் கொல்வதற்காக தனியாய் வைக்கப்பட்டிருந்த சக்தி ஆயுதம் இந்த கடோத்கசனிடம் போடப்பட்டுவிட்டது என்று பகவான் அர்ஜுனனைப் பார்த்து சொன்னார். பிறகு தர்மபுத்திரர் துக்கத்துடனும் பொச்சரிப்புடனும் கர்ணனுடன் யுத்தம் செய்ய புறப்பட்டார். அச்சமயம் ப்ரபுவான ஸ்ரீ வேதவியாஸர் அங்குவந்து தர்மபுத்திரரைப் பார்த்து இவ்வாறு சொன்னார். "எந்த சக்தி ஆயுதத்தால் அர்ஜுனன் சாக இருந்தானோ அந்த சக்தியால் கடோத்கசன் கொல்லப்பட்டான். ஆகையால் ராஜ சிரேஷ்டனே! நீ வியசனப்படாதே, அர்ஜுனன் தெய்வீகமாய் பிழைத்தான்." இவ்வாறு வேதவியாஸர் சொல்லி புறப்பட்டார். பிறகு யுத்தம் நடந்தது.

## துரோணரின் வதம்.

பீமார்ஜுனர்களாலும் இதர பாண்டவர்களாலும் கௌரவர்களின் ஸைனியம் அடிக்கப்படவும் பாண்டவ ஸைனியமும் கௌரவர்களால் அழிக்கப்படவும் மகத்தான தீவட்டிகளை கையில் பிடித்த எல்லா போர்வீரர்களும் நித்திரைக்கு வசமானார்கள். தூங்கும் இந்த ஜனங்களைப்பார்த்து சந்திரனின் நிலவு வரும்வரையில் எல்லோரும் அப்படியே தூங்குங்கள் என்று அர்ஜுனன் சொன்னான். இவ்வாறு சொல்லப்பட்ட எல்லா ஸேனையிலுள்ளவர்களும் அர்ஜுனனுக்கு ஆசீர்வாதங்களைச்செய்து யுத்தபூமியில் இருந்தபடியே நித்திரை செய்தார்கள். சந்திரன் உதயமாகவும்

அந்த இரு ஸைனியத்தார்களும் சஸ்திராஸ்திரங்களை விருஷ்டி செய்துகொண்டு மறுபடியும் யுத்தத்திற்கு வந்தார்கள். அந்த யுத்தத்தில் ஸாத்யகியிடம் ஸோமதத்தராஜன் பூரிராஜன் இவர்கள் யுத்தத்திற்கு வந்து சேர்ந்தனர். ஸாத்யகி ஒருவனாயிருந்து அவர்களுடன் யுத்தம் செய்தான். ஸாத்யகியால் பிராணனைவிட்டு அவ்விருவர்களும் பூமியில் விழுந்தார்கள். பால்ஹீகராஜன் ஸாத்யகியுடன் யுத்தம் செய்தான். வீரனான பால்ஹீகன் ஸாத்யகியை ரதமில்லாமல் செய்து ஸாத்யகியைக் கொல்வதற்காக பாணத்தை சீக்கிரம் விட்டான். பீமசேனர் அந்த பாணத்தை மூன்றாக சேதனம் செய்தார். பால்ஹீகன் பீமசேனரிடம் சக்னி ஆயுதத்தை ப்ரயோகம் செய்தான். பீமசேனர் அந்த ஆயுதத்தால் அடிபட்டு மூர்ச்சையடைந்து பிறகு கதாயுதத்தால் அவனை அடித்தார். பால்ஹீகன் பிராணனை விட்டு விழுந்தான். முன்பு பால்ஹீகன் ஸ்னேகத்துடன் பீமசேனரை இவ்வாறு பிரார்த்திருந்தான். ஹே பீமசேனா! என் பிரீதியை விரும்பும் நீதான் யுத்தத்தில் என்னைக்கொல்லவேண்டும். நீ என்னைக் கொன்றால்தான் நான் கீர்த்தியையும் தர்மத்தையும் நல்ல லோகத்தையும் அடைவேன். என்றிவ்வாறு சொல்லப்பட்ட பீமசேனர் நான் உன்னால் அதிகமாய் ஸங்கடப்பட்டால் தான் நான் உன்னை யுத்தத்தில் கொல்வேன். இல்லாவிடில் கொல்லமாட்டேன். நான் உன்னைக் கொல்வது உனக்கு ஸேவையாக ஆகவேண்டும் என்று பால்ஹீகராஜனைப்பார்த்து சொன்னார். இந்தக் காரணத்தால்தான் பால்ஹீகன் பீமசேனரால் ராத்திரி யுத்தத்தில் கொல்லப்பட்டான்.

பால்ஹீகன் பிராணனை விடவும் கர்ணன் துரியோதனன் முதலான கௌரவர்கள் அசுவத்தாமாசாரியாரை முன்னிட்டுக் கொண்டு பீமசேனரிடம் வந்து சேர்ந்தார்கள். திருஷ்டத்யும்னன் தம்பிகளுடன் கூடியவனாயும் ஸாத்யகியுடன் கூடியவனாயும் துரோணாசாரியாரிடம் வந்துசேர்ந்தான். அர்ஜுனன் ஸம்ஸப்தகர்களுடன் யுத்தம்செய்தான். அந்த யுத்தம் மிகவும் பயங்கரமாயும் ஆச்சரியமுள்ளதாயும் இருந்தது. அன்று தினமே ராத்திரியுத்தத்தில் பீமார்ஜுனர்கள் ஸம்பூர்ணமாய் ஒரு அக்ஷௌஹிணீ ஸைனியத்தைக் கொன்றார்கள். பிறகு சூரியோதயமாயிற்று. அப்



பொழுது துரோணாசாரியார் யுத்தத்தில் மிகவும் பயங்கரமான காரியத்தைச் செய்தார். அவர் பாஞ்சாலகர்களின் ரத ஸமூகத்தை பிரவேசித்து யானை குதிரை தேர்படைகள் காலாட்படைகள் இவைகளை ஸம்ஹாரம் செய்தார். துரோணாசாரியாரால் துரத்தப்பட்ட மகாரதிகர்கள் அந்த பாணங்களின் இருளில் ஸுகமடையவில்லை. க்ரூரமான தனுர்தாரியாயும் உத்தமமான அஸ்திரங்களை அறிந்தவராயுமுள்ள துரோணாசாரியார் வயதுமுதிர்ந்தவராயினும் யௌவன வயதுள்ளவர்போல் யுத்தத்தில் நடமாடினார். துரோணாசாரியாரால் அந்த யுத்தத்தில் ஓர் அர்புதம் (பத்துகோடி) ரதிகர்கள் கொல்லப்பட்டனர். அதற்கு ஆயிரம் மடங்கு அதிகமாய் காலாட்படைகள் கொல்லப்பட்டனர். இதில் பத்தில் ஓர்பாகம் குதிரைகள் கொல்லப்பட்டன. யுத்தத்தில் சூரரான துரோணாசாரியாரால் பத்துகோடி யானைகள் கொல்லப்பட்டன. ' மேலும் அப்படியே துரோணாசாரியார் யுத்தத்தின் நடுவில் விராடராஜனையும் துருபதராஜனையும் இரண்டு பாணங்களால் பரலோகமடையும்படி செய்தார். பிறகு பீமசேனர் அசுவத்தாமாதிகளை ஜயித்து திருஷ்டத்யும்னனை ஸம்ரக்ஷித்தார். பீமசேனரால் காப்பாற்றப்பட்ட த்ருஷ்டத்யும்னன் துரோணாசாரியாரைக்கொல்ல மிகவும் எத்தனம் செய்தான். அவர் பாண ஸமூகங்களால் த்ருஷ்டத்யும்னனை தடுத்தார். திருஷ்டத்யும்னன் துரோணாசாரியாரை பாணத்தால் அடித்தான். அவனால் அடிபட்டு துரோணாசாரியார் மூர்ச்சையடைந்தார். ரதத்தில் அசைவற்று உட்கார்ந்தார். திருஷ்டத்யும்னன் அவஸரமாய் கத்தி, கேடயம் எடுத்துக்கொண்டு துரோணாசாரியாரின் ரதச்ரேஷ்டத்திலேறினான். பிறகு துரோணாசாரியார் பிரக்ஞையடைந்து கைமுட்டை அளவுள்ள பாணசமூகங்களால் திருஷ்டத்யும்னனை ப்ரஹாரம் செய்தார். திருஷ்டத்யும்னன் அந்த பாணங்களால் மிகவும் ஸங்கடப்பட்டவனாய் துரோணாசாரியாரின் ரதத்தினின்றும் திரும்பி தன் ரதத்தில் ஏறிக்கொண்டான். துரோணாசாரியாரும் திருஷ்டத்யும்னனும் மகாத்வேஷம் கொண்டவர்களாய் பாணமென்னும்மழையைபெய்துகொண்டு மறுபடியும் யுத்தம் செய்தார்கள். துரோணாசாரியார் பாணங்களால் சத்ருக்களை தடுத்து பிரம்மாஸ்திரத்தை ப்ரயோகம் செய்தார்.

காப்பக

அந்த அஸ்திரத்தால் யுத்தத்தில் அநேக பாஞ்சால ராஜர்களையும் கொளுத்தினார். புருஜித்ராஜன் குந்திபோஜராஜன் மற்றும் பல ராஜர்கள் பிரம்மாஸ்திரத்தால் அப்பொழுது கொல்லப்பட்டார்கள். பீமசேனர் அர்ஜுனன் ஸாத்யகி இவர்கள் முறையே மகாஸைனியங்களுடன் கூடி குருபுத்ரரான அசுவத்தாமாவை தூரத்திலேயே தடுத்தார்கள். பீமசேனனும் அர்ஜுனனும் துரியோதனாதிகளையும் சல்யராஜன் கிருதவர்மா கிருபாசாரியார் இவர்களையும் பாண சமூகங்களால் யுத்தத்தில் தடுத்தார். அந்த யுத்தத்தில் பீமசேனர் யானை ஸைனியத்தையும் மகததேசாதிபதியான ஜயத்ஸேனராஜனையும் மகதராஜர்களின் அநேக ரத சமூகத்தையும் ஸம்ஹாரம் செய்தார். பிறகு மாளவ தேசாதிபதியான இந்திரவர்மராஜனின் அசுவத்தாமா என்னும் யானையை பீமசேனர் கொன்றதைப் பார்த்து, ஸ்ரீகிருஷ்ணரால் தூண்டப்பட்ட தர்மபுத்திரர், தன்னிடம் துரோணாசாரியார் யுத்த ஆரம்பத்தில் அசுவத்தாமா இறந்ததைக் கேட்டுவிட்டு நான் யுத்தம் செய்வதில்லை என்று சொல்லியிருந்ததால், அசுவத்தாமா ஹத: என்று துரோணாசாரியாரிடம் சொன்னார். அதற்கு துரோணாசாரியார் உண்மையைச்சொல் என்று தர்மபுத்திரரைக்கேட்டார். தர்மபுத்திரர் அசுவத்தாமா இறந்தது ஸத்யம் என்று சொன்னார். மெதுவாய் கீழ்தொனியுடன் யானை என்று சொன்னார். அசுவத்தாமா ஹத: என்னும் வார்த்தையை மட்டில் துரோணாசாரியார் கேட்டு மிகவும் சங்கடமடைந்தார். பீமசேனர் துரோணாசாரியாரின் தேர் அச்சைப்பிடித்துக்கொண்டு, ஹே துரோணாசாரியாரே! குணவானாகிய உமக்கு இம்மாதிரி க்ஷத்திரியனுடைய தர்மத்தைக் கைப்பிடித்து ஜீவிப்பது உசிதமல்ல என்று சொன்னார். அப்பொழுது ரிஷிகள் ஆகாயத்தில் நின்றுகொண்டு ஹே துரோணா! யுத்தம் போதும். உன் லோகத்திற்கு வா என்று சொன்னார்கள். துரோணாசாரியார் இவை எல்லாவற்றையும் அறிந்து ஆயுதத்தை கீழே விட்டெறிந்தார். அப்பொழுது அவர் எல்லா கர்மங்களின் பலனையும் விஷ்ணுவிடம் ஸமர்ப்பணம் செய்து, யோகாப்யாஸம் செய்துகொண்டு, உத்தமனும் சர்வேசுவரனும் தோஷமில்லாதவனுமான வாஸுதேவனை த்யானம் செய்துகொண்டு தேகத்தைவிட்டு தன்லோகத்திற்கு



புறப்பட்டுப்போனார். ஆகாயத்திலிருந்து தன் லோகத்திற்கு ப்ரயாணம் செய்த துரோணாசாரியாரை ஸ்ரீ கிருஷ்ணரும் பாண்டவர்களும் கிருபாசாரியாரும் சஞ்சயனும் அசுவத்தாமாசாரியாரும் பார்த்தார்கள். திருஷ்டத்யும்னன் பாண்டவர்களால் தடுக்கப்பட்டும் கத்தியையும் கேடயத்தையும் எடுத்துக்கொண்டு துரோணரிடம் வந்தான். கத்தியால் துரோணாசாரியாரின் தலையை சேதித்து திருஷ்டத்யும்னன் மறுபடியும் தன் ரதத்தில் வேகமாய் ஏறினான். கிருபாசாரியார் இறந்து போன துரோணாசாரியாரைப் பார்த்து மிகவும் பயந்துபோய் ஒத்தைக்குதிரையின்மீது ஏறிக்கொண்டு ஓட்டம் பிடித்தார். துரோணாசாரியாரின் சிரத்தை திருஷ்டத்யும்னனை அர்ஜுனன் தர்மபுத்திரர் ஸாத்யகி இவர்கள் சேதிக்கவும் நிந்தித்தார்கள்.

இதைக்கேட்டு கோபமடைந்த திருஷ்டத்யும்னன் பூரிஸ்ரவஸ் ராஜனை எப்படிக்கொன்றாய் என்று அர்ஜுனன் ஸாத்யகி இவர்களைப்பார்த்து சொன்னான். ஸாத்யகி கோபமடைந்து கையில் கதாயுதம் எடுத்து திருஷ்டத்யும்னனிடம் வந்தான். திருஷ்டத்யும்னன் பயமில்லாமல் கத்தி எடுத்துக்கொண்டு ஸாத்யகியை யுத்தத்திற்கு அழைத்தான். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணனால் தூண்டப்பட்டவராய் பீமசேனர் ஸாத்யகியைபிடித்துக்கொண்டார். திருஷ்டத்யும்னனிடம் ஸ்நேகத்தால் கட்டுப்பட்டவராய் பீமசேனர் அர்ஜுனனை சமாதானம் செய்தார். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணனால் போதிக்கப்பட்டவர்களான அர்ஜுனனும் ஸாத்யகியும் திருஷ்டத்யும்னனும் முன்போல் உத்தமமான ஸ்நேகத்தை அடைந்தனர்கள். மறுபடியும் யத்னத்துடன் யுத்தத்திற்கு நின்றனர்.

## நாராயணாஸ்திர விருத்தாந்தம்.

அப்போது தனுஸ் எடுத்துக்கொண்டு அசுவத்தாமாசாரியார் யுத்தத்திற்கு வந்தார். அவர் தன்னுடைய தந்தையான துரோணாசாரியார் கொல்லப்பட்டு போனதைக்கேட்டு எல்லா சத்ருக்களையும் நான் கொன்றுவிடுகிறேன் என்று சபதம் செய்தார். உடனே கோபம் கொண்டு எல்லோரையும் கொல்லுவதற்காக நாராயணாஸ்திரத்தை பிரயோகம் செய்தார். பீமசேனரைத்தவிர்த்து மற்றவர்கள் எல்லோரும் பயந்து போயினர். தருமபுத்திரர் விசனமடைந்து

இவ்வாறு பேசினார். ஸாத்யகி முதலான எல்லோரும் ஓடிப் போகட்டும். தம்பிமார்களோடு கூடிய நான் அசுவத்தாமாசாரியாரின் நாராயணாஸ்திரத்தால் சுட்டுப்போகிறேனென்றார். இதைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ணர் நீங்கள் எல்லோரும் இந்த நாராயணாஸ்திரத்திற்கு நமஸ்காரம் செய்துவிடுங்கள். அதனால் நீங்கள் பிழைத்து விடுவீர்கள் என்று இந்த சந்தர்ப்பத்தில் பேசினார். பிறகு அர்ஜுனாதிகள் எல்லோரும் நமஸ்காரம் செய்தனர். பீமசேனர் மட்டில் நமஸ்காரம் செய்யவில்லை. அப்பொழுது அந்த நாராயணாஸ்திரம் எல்லோர்களையும் விட்டு பீமசேனருடைய தலையில் சுற்றிக் கொண்டது. பீமசேனர் அச்சமயம் நெருப்பில் விழுந்தமாதிரி காணப்பட்டார். அக்னியில் அக்கியானது கொளுத்தப்படாமல் இருப்பதுபோல் பீமசேனர் நாராயணாஸ்திரத்தால் கொளுத்தப்படாமலிருக்கவும் அர்ஜுனன் தன் அண்ணாவுக்கு கைங்கரியம் செய்வதற்காக வாருணாஸ்திரத்தால் அந்த நாராயணாஸ்திரத்தை சுற்றி வைத்தான். பீமசேனருக்கு அவருடைய சரீரத்தில் நாராயணாஸ்திரம் விழுந்து மேலே மட்டில் வாருணாஸ்திரம் சுற்றிக்கொண்டிருப்பதால் யாதொரு பிரயோஜனமும் காணப்படவில்லை. ஆயினும் அண்ணாவின் மீது உள்ள சிநேகத்தால் அர்ஜுனன் அவரை வாருணாஸ்திரத்தால் சுற்றினான். ஸ்ரீகிருஷ்ணர் தன்னுடைய நாராயணாஸ்திரத்திற்கு விசேஷமான பராக்கிரமம் இருப்பதையும் பீமசேனருக்கு சாகாத்தன்மை இருப்பதையும் காட்டிக் கொடுப்பதற்காக அர்ஜுனனோடு சேர்ந்து பீமசேனருடைய ரதத்தில் ஏறினார். வாருணாஸ்திரத்தால் சுற்றப்பட்டிருக்கும் நாராயணாஸ்திரம் வெளியேயிருந்து பிரவேசம்செய்த அர்ஜுனனை அவன் ஸ்ரீ கிருஷ்ணனுடன் சேர்ந்து இருந்தாலும் நானுடைய ஆவேசம் கொண்டவனாயிருந்தாலும் சுடவில்லை. பிறகு ஸ்ரீகிருஷ்ணனும் அர்ஜுனனும் பீமசேனருடைய கையினின்றும் அவருடைய ஆயுதத்தை பிடுங்கி அவருடைய ரதத்தினின்றும் அவரை இறக்கவும் நாராயணாஸ்திரம் உடனே சாந்தி அடைந்தது. பீமசேனர் சுத்தமான க்ஷத்திரிய தர்மத்தில் ஈடுபட்டவராதலால் மற்ற ஜனங்கள் தன் ஆயுதங்களை விட்டு தன் வாகனங்களினின்றும் இறங்கி தங்களைக் கொல்லவந்த நாராயணாஸ்திரத்தை நமஸ்காரம் செய்தபோதிலும் பீமசேனர்



ஆயுதபாணியாய் ரதாரூடராய் பிரம்மாதிகளாலும் பொறுக்கமாளாத நாராயணாஸ்திரத்துடன் யுத்தம் செய்தார். தன்னுடைய தர்மத்தைக் கெடுத்துக்கொள்வதில் பிரவிருத்தி அடைந்திருக்கும் சிநேகிதரையும் இப்படி ஸ்வதர்மத்தை கெடுத்துக்கொள்ளாதே என்று தடுப்பது அவசியமான தருமமாதலால் பீமசேனர், இதரர்களையும் நாராயணாஸ்திரத்திற்கு நமஸ்காரம் செய்யவேண்டாமென்று தடுத்தார். ஸ்ரீமந் நாராயணனையே தேவதையாகக் கொண்ட நாராயணாஸ்திரம் எல்லோராலும் நமஸ்காரம் செய்யப்பட அருகமாயிருந்தபோதிலும், யுத்தத்தில் அது சத்ருவால் விடப்பட்டிருப்பதால் தன் ஜீவனத்திற்காக அது நமஸ்காரம் செய்யப்பட அருகமானதன்று. ஆகையால்தான் பீமசேனர் நமஸ்காரம்செய்யவில்லை. இந்த அஸ்திர மந்திரத்திற்கு த்ரஷ்டாவாய் ரிஷி வாயுபகவான். இந்த நாராயணாஸ்திரத்திற்கு அபிமானி தெய்வம் விஷ்ணு. அந்த வாயுபகவானின் ஸ்வரூபமே பீமசேனராதலால் அந்த அஸ்திர நெருப்பானது நெருப்பை எப்படி சுடாதோ அதுபோல் பீமசேனரை சுடவில்லை. பீமசேனர் அந்த நாராயணாஸ்திரம் விழுந்த சமயம் நாராயணனிடமும் விஷ்ணுவிடமும் அப்பொழுது மனதாலேயே நமஸ்காரம் செய்தார், க்ஷத்ரியதர்மத்தை அனுஸரித்து வெளிப்பார்வைக்கு நமஸ்காரம் செய்யவில்லை. அதாவது வெளியே தெரியும்படி சரீரத்தை தண்டமிட்டு வணங்கவில்லை. ஸ்ரீ கிருஷ்ணர் தன்னுடைய அஸ்திரமும் பீமசேனரும் அமோகமென்று சாதித்து அனந்த சக்தி படைத்த அவர் அர்ஜுனனுடைய குதிரைகளை ஓடும்படி கட்டினார். இதைக்கண்ட துரியோதனன் அசுவத்தாமாசாரியாரை இந்த நாராயணாஸ்திரத்தை மறுபடியும் பிரயோகம் செய்யும்படி தூண்டினான். அசுவத்தாமாசாரியார் மறுபடியும் இது பிரயோகம் செய்வது சாத்தியமாகாது என்று சொல்லி திருஷ்டத்யும்னனிடம் யுத்தத்திற்கு போனார். அசுவத்தாமாசாரியார் யுத்தத்திற்கு வருவதைப்பார்த்த ஸாத்யகி த்ருஷ்டத்யும்னனுக்கு ஸகாயமாய்ப்போனான். அசுவத்தாமாசாரியார் ஸாத்யகி திருஷ்டத்யும்னன் இருவர்களையும் யுத்தத்தில் பாணத்தால் அடித்தார். அவர்கள் இருவரும் மூர்ச்சையடைந்து யுத்தத்தில் விழுந்தார்கள். அச்சமயம் எதிர்த்து யுத்தத்திற்கு வந்த பீமசேன

னுடைய குதிரைகளை அசுவத்தாமாசாரியார் யுத்தத்தில் ஓட்டி விட்டார். அந்தக்குதிரைகளை பீமசேனர் நிறுத்த எத்தனிக்கும் பொழுது அர்ஜுனன் அசுவத்தாமாசாரியாரைக் கண்டான். பிறகு அர்ஜுனன் கோபம்கொண்டு குரூரமான வார்த்தைகளை அசுவத்தாமாவின் காதில் விழச்செய்து அவரிடம் யுத்தத்திற்கு வந்தான். அசுவத்தாமாசாரியார் மகாகோபம்கொண்டு அந்த யுத்தத்தில் ஆக்னேயாஸ்திரத்தை பிரயோகம் செய்தார். அந்த அஸ்திரத்தால் பாண்டவர்களின் சைனியம் முழுதும் வியாப்த மாயிற்று. அப்பொழுது ஒரு அக்ஷௌஹிணி ஸைன்யம் அந்த ஆக்னேயாஸ்திரத்தால் சுட்டுப்போய்விட்டது. இந்த யுத்தத்தில் ரதத்துடன் கூடிய அர்ஜுனனை ஸ்ரீ கிருஷ்ணன் காப்பாற்றினர். அசுவத்தாமாசாரியார் இவ்வளவு செய்தும் உயிருடனிருக்கும் அர்ஜுனனைக்கண்டு, மகாகோபம் கொண்டு தன் தனுஸ்ஸை கீழே விட்டெறிந்துவிட்டு காட்டிற்கு ஓடினர். அப்பொழுது வேதார்த்தத்தை நிர்ணயம் செய்தவரும் சம்பூர்ணமான ஷட்குண தேகம்படைத்தவருமான ஸ்ரீவேதவியாஸர் வந்து அசுவத்தாமாசாரியாரை பார்த்து இவ்வாறு சொன்னர். நீர் தேவகார்யம் செய்வதற்காக சாக்ஷாத்தான பரமசிவனே பூமியில் அவதாரம் செய்திருக்கிறீர். நீர் செய்த நாராயணாஸ்திரத்தின் பிரயோகமாகிய பெருங்காரியத்தைப் பார்த்தோம். இன்னமும் நீர் செய்யவேண்டியதுண்டு. அதை நீர் செய்யும்; ஆகையால் நீர் கோபித்துக் கொண்டு வனம் செல்லவேண்டாம் என்று இவ்வாறு வேதவ்யாஸரால் சொல்லப்பட்ட அசுவத்தாமாசாரியார், சுவாமி! தங்கள் வார்த்தையை நாளை காலையில் நடத்துகிறேன் என்று சொல்லி சமஸ்தமான வேதத்திற்கும் ஆசிரயமாயுள்ள ஸ்ரீவேதவ்யாஸரை நமஸ்காரம் செய்துவிட்டு தன் டேராவிற்கு புறப்பட்டுப்போனர். துக்கத்துடன் தலைகுனிந்த துரியோதனாதிகள் பயமடைந்து அசுவத்தாமாசாரியாரின் பின்னடியே தங்கள் டேராவிற்குச்சென்றனர். எல்லாபாண்டவர்களும் சந்தோஷம் கொண்டவர்களாய் உத்தமரும் துஷ்ட ஜனங்களை சிக்ஷிப்பவருமான ஸ்ரீகிருஷ்ணனை ஸ்தோத்திரம் செய்துகொண்டு அவரவர்கள் டேராவிற்குச்சென்றனர். அந்த டேராவிலும் ராத்திரி காலத்தில் ஒன்றுசேர்ந்து பாண்



டவர்கள் பரமசிவனின் அந்தர்யாமியாயுள்ள சிவன் என்று பெயர்படைத்த ஸ்ரீஹரியின் குணங்களை ஸ்மரணை செய்துகொண்டு ஆனந்தமடைந்தனர்.

ஸ்ரீமத் ஆனந்ததீர்த்த பகவத்பாதாள் இயற்றிய
ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் துரோணபர்வகதை
அடங்கிய 26வது அத்தியாயம் ஸம்பூர்ணம்.
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

# ஆசாரமாலை.

---

(முன் 76ம் பக்கம் தொடர்ச்சி.)

5. ப்ரத்யஞ் தேவனாம் விச: ப்ரத்யஞ்ஙுதேஷி மானுஷான்।
ப்ரத்யஞ் விச்வம் ஸ்வர்த்ருசே॥

ஹே ஸூர்யனே! தேவான் விச: மருத் தேவதைகளை எதிர்கொண்டுபோய் உதேஷி ஆவர்பவிக்கிறாய். மானுஷான் ப்ரத்யஞ் உதேஷி மனுஷ்ய வர்க்கங்களை எதிர்கொண்டு உதிக்கிறாய். ஸ்வம் ஸ்வர்க்கலோகத்தை த்ருசே பார்ப்பதற்காக உதேஷி உதிக்கிறாய். அதாவது மூன்று லோகத்திலுள்ளவர்கள் எப்படி உன்னைபார்ப்பார்களோ அப்படி உதிக்கிறாய்.

6. யேனா பாவக சக்ஷஸாபுரண்யம் தம் ஜனாம் அனு। த்வம் வருண பச்யஸி॥

பாவக எல்லாவற்றையும் சோதிப்பவனே! வருண மேலான ரூபமுள்ள ஸூர்யனே! நீ ஜனான் உன் பக்தர்களை புரண்யந்தம் உன்னிடம் பக்தியைக் கொண்டவர்களை யேன சக்ஷஸா எந்த பிரகாசத்தால் அல்லது பிரஸாதத்தால் த்வம் பச்யஸி பார்க்கிறாயோ அந்த பிரகாசத்தை பிரஸாதத்தை எனக்கு கொடு.

7. வித்யாமேஷி ரஜஸ்பிருத்வஹா மிமானோ அக்துபி:।
பச்யன் ஜன்மானி ஸூர்ய॥

அஹ: பகல்களை அக்துபி: ஸஹ இரவுகளுடன் மிமான: உண்டுபண்ணிக்கொண்டும் ஜன்மானி ஜனனமுள்ள பிராணிகளை பச்யன் பார்த்துக் கொண்டும் பிருது விஸ்தாரமான ரஜ: பூலோகத்தையும் த்யாம் அந்தரிக்ஷ லோகத்தையும் வி ஏஷி விசேஷமாய் போகிறாய்.

8. ஸப்தத்வா ஹரிதோ ரதே வஹந்தி தேவஸூர்ய:। சோசிஷ்கேசம் விசக்ஷண॥

விசக்ஷண ஸமஸ்த காரியங்களிலேயும் ஸமர்த்தனே! தேவ பிரகாசிப்பவனே! ஸூர்ய: க்ஞானிகளால் அடைபவனே! சோசிஷ்கேசம்: க்ஞான தேஜஸ்ஸையே தலைமயிராய்க்கொண்டிருப்பவனும் ரதே வ்யவஸ்திதம் ரதத்திலிருப்பவனும் அல்லது பக்தர்களிடத்திலிருப்பவனுமான த்வா உன்னை ஸப்த ஏழான ஹரித: ஜகத்தில்பரவும் குணத்தோடுகூடிய கிரணங்கள் அல்லது ஞானிகள் வஹந்தி சேர்ப்பிவிக்கின்றன.

9. அயுக்த ஸப்த சுந்த்யுவ: ஸூரோ ரதஸ்ய நப்த்ய:। தாபிர்யாதி ஸ்வயுக்திபி:॥

ஸூர: ஸர்வப்ரேரகனுயுள்ள சூரியன் ஸப்த ஏழு ஸ்வரூபங்களானவும் ரதஸ்ய ரதத்தை தள்ளாததாயுமுள்ள சுந்த்யுவ: சோதிக்கும் சக்தியுள்ள நப்த்ய: பெண்குதிரைகளை தன்ரதத்தில் அயுக்த சேர்த்தார். தாபி: இப்பேர்ப்பட்டதாய் ஸ்வயுக்திபி: தன்னால் பிரேரேபிக்கப்பட்டதாயுள்ள குதிரைகளுடன் யக்ஞவாடத்தையோ அல்லது கிருகத்தையோ யாதி போகிறன்.

10. உத்வயம் தமஸஸ்பரி ஜ்யோதிஷ் பச்யந்த உத்தரம்। தேவம் தேவத்ராஸூர்யமகன்ம ஜ்யோதிருத்தமம்॥

வயம் அனுஷ்டானம் செய்பவர்களான நாங்கள் உத் தமஸ: பரி இரவுக்குமேல் இருக்கும் அல்லது பாபத்தின் மீதிருப்பவராயும் ஜ்யோதி: தேஜோரூபியாயிருப்பவரும் உத்தரம் அதிகமேலானவரும் தேவத்ரா தேவர்களுக்கு சரணராய் தேவம் ஸர்வோத்தம தேவனுயிருப்பவரும் க்ஞானாதி குணங்களுடன் கூடியிருப்பவருமான ஸூர்யம் ஸூரியனை பச்யந்த: பாரப்பவர்களாய் உத்தமம் ஜ்யோதி: ஸூர்யம் மேலான ஜ்யோதியுள்ள ஸூர்யனென்று சொல்லப்படும் நாராயணனை அகன்ம ஸாயுஜ்யமடைகிறோம்,

11. உத்யன் அத்யமித்ரமஹ ஆரோஹன் உத்தராம்திவம்। ஹிருத்ரோகம் மம ஸூர்ய ஹரிமாணம் சநாசய॥

ஹே ஸூர்ய ரோகங்களை நிவிருத்தி செய்பவனுயுள்ள ஸர்வப்ரோகனே! ஹே மித்ர மஹ எல்லோருக்கும் அனுகூலமான இந்திரியங்களைக் கொண்டவனே! அத்ய இப்பொழுது உத்யன் உதயத்தை அடைந்தவனுய் உத்தராம்திவம் ஆரோஹன் அந்தரிக்ஷலோகத்தில் ஏறியிருந்து மம என்னுடைய ஹிருத்ரோகம் ஹிருதயத்தை அடைந்திருக்கும் சரீரத்தினுள்ளே இருக்கும் உபாதியையும் ஹரிமாணம் ச சரீரகாந்தியை



அபஹாரம் செய்யும் வெளிப்புறமான உபாதியையும் நாசய நாசமில்லாமல் செய்து உன்னை ஸ்தோத்திரம் செய்யும் எனக்கு இவ்விருவகை ரோகங்கள் இல்லாமற் செய்.

12. ஸூகேஷு மே ஹரிமாணம் சோபணகாஸூதத்மஸி। அதோஹாரித்ரவேஷு மே ஹரிமாணம் நிதத்மஸி॥

மே என்னுடைய ஹரிமாணம் சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் மஞ்சள் வர்ணஸ்வபாவத்தை ஸூகேஷு சுகங்களாகிற கிளிகளிலும் ரோபணகாஸு நாரத்தாங்குருவிகளிலும் ததமஸி இருக்கும்படி செய்கிறோம். அதாவது நம்முடைய பாபத்தை மித்யாக்ஞானிகளிடமிருக்கும்படி விடுகிறோம். அதோ மேலும் ஹரித்ரவேஷு ஹரிதான விருக்ஷங்களிலேயும் அல்லது அப்பேர்ப்பட்டபாபங்களிலேயும் மே ஹரிமாணம் என்னுடைய மஞ்சள் வர்ண ஸ்வபாவத்தை நிதத்மஸி வைக்கிறேன். அங்குதான் இருக்கட்டுமே ஒழிய என்னை பாதிக்க வேண்டாம்.

13. உதகாதயமாதித்யோ விச்வேன ஸஹஸா ஸஹ। த்விஷந்தம் மஹ்யம் ரந்தயன்மோ அஹம் த்விஷதே ரதம்॥

மஹ்யம் த்விஷந்தம் ரந்தயன் எனக்கு உபத்ரவத்தைச்செய்யும் உபாதியை ஹிம்சித்துக்கொண்டும் மேலும் அநிஷ்டத்தைச்செய்பவனை ஹிம்ஸித்துக்கொண்டும் அயம் ஆதித்ய: அதிதிதேவியின் குமாரனுன இந்த ஸூர்யன் விச்வேன ஸஹஸா ஸஹ ஸம்பூர்ணமான பலத்தோடும் அல்லது வாயுவோடும் உதகாத் உதயத்தை அடைந்திருக்கிறன். அஹம் நான் த்விஷதே அநிஷ்டத்தைச் செய்யும் ரோகத்தின்பொருட்டு மோ ரதம் ஹிம்சையை செய்வதில்லை. ஸூர்யனே! நீயே எனக்கு அநிஷ்டத்தைச் செய்து ரோகத்தை நாசம் செய்வாய். (தொடரும்).

---

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமத்வ விஜயம்.

---

### ஒன்பதாவது ஸர்க்கம்.

(முன் 80ம் பக்கம் தொடர்ச்சி.)

24. அதுபோல் ஸ்ரீமத்வ சாஸ்திரத்தை அப்யஸித்தவன் அதனால் ஸ்பஷ்டமாய் க்ஞானபத்தியாதி குணங்களால் ஆதிக்கத்தை அடைந்தபோதிலும் ஸ்ரீமத்வ சாஸ்திரத்தின் அப்யாஸத்

தால் ஏற்படகூடிய அபரிமிதமான அந்த ஸம்பூர்ண பலனையும் அவன் மந்தபுத்தியுள்ளவனாய் இருப்பதன் நிமித்தம் அடைவதில்லை. ஏனெனில் இயற்கையாக அதற்கு தகுந்த யோக்யதை அவனிடம் இல்லை. 25. விஷ்ணுவுக்கும் வைஷ்ணவர்களுக்கும் சந்தோஷகரமான காரியங்களைச்செய்யும் அரசன் ஒருவன் உத்தமமான அந்த வலம்புரி சங்கத்தை கிரயம் கொடுத்து வாங்கினான். பிறகு பக்தியுடன் நிரந்தரமாய் அதை கந்தபுஷ்பாதிகளால் பூஜித்து சொல்லுக்கும் மனதிற்கும் எட்டாததாயுள்ள ஸர்வதேசாதிபத்யம் முதலிய மகத்தான ஐசுவரியத்தை அடைந்தான். 26. அது போல் ஒருவன், அவன் எவனாயிருந்தாலும் சரியே, ஸ்ரீமத்வாசாரியார் இயற்றியுள்ள சாஸ்திரமாகிற கல்பவிருக்ஷத்தை பக்திபூர்வமாய் சிரவண மனனாதிகளால் சேவித்தால் அவன் விரும்பகூடிய எல்லாவகை பலன்களையும் அடைவான். வலம்புரி சங்கத்தை வாங்கிய உத்தமகுணமுள்ள அந்த அரசனை பின்பற்றியவனாவான். சுருங்கச்சொல்லின் தெய்வீகமாய் ஸ்ரீமத்வசாஸ்திரம் படித்துத் தெரிந்துகொள்ள அது ஸுலபமாய் கிடைத்தும் அது பிரயோஜனமில்லை என்று அதை விட்டவன், அமூல்யமான வலம்புரி சங்கத்தை விட்டெறிந்த சுண்ணாம்புகாரனைப்போல் புத்தியுள்ளவனாகி எல்லோரைவிட மிகவும் நீசனாவான். ஸ்ரீமத்வசாஸ்திரம் சரியான பலனைத்தரக்கூடியதென்று நன்றாய் தெரிந்துகொண்டு பக்தியுடன் அதை ஸேவித்துவந்தாலும் சிலருக்கு அவரவர்களின் புத்திக்குத்தகுந்தபடி அது தெரியவருவதின் நிமித்தம், அவரவர்களுக்கு அவரவர்களின் யோக்யதைக்கு அருகமான பலன்தான் வலம்புரி சங்கத்தை விற்றவனுக்கு வந்த அதிகக்கிரயத்தை போல கிடைக்கும். வலம்புரி சங்கத்தை கிரயம்கொடுத்து வாங்கிய அரசனுக்கு அதை நிரந்தரம் பக்தியுடன் பூஜித்ததால் ஸாம்ராஜ்ய பாக்யம் கிடைத்ததுபோல் ஸ்ரீமத்வசாஸ்திரத்தில் மேலான உத்தமக்ஞானம் படைத்தவர்களுக்கு ஸம்பூர்ண பலனும் கிடைக்கிறது. 27. இவ்வாறு பூஜ்யரான ஸ்ரீமத்வாசாரியார் தன் சாஸ்திரத்தை இயற்றி பிரசுரப்படுத்திய இவ்வுற்சவகாலத்தில் அவர் சோபனபட்டர் முதலான உத்தம பண்டிதர்களால் மட்டில் பூஜிக்கப்படவில்லை. ஆகாயத்திலுள்ள பரமசிவன் மகேந்திரன்



பிரஹஸ்பதி முதலான உத்தம தேவர்களாலும் கொண்டாடப்பட்டார்.

## குருவின் புத்தியை மாற்றியது.

28. ஸ்ரீமத்வாசாரியார் தேசசஞ்சாரம் செய்துகொண்டு வருஷருதுவைப்போல் சரியானதான தத்வக்ஞானத்திற்கு அருகமான ஜனங்களை அதிகமான ஸம்ஸார தாபத்தை பரிகரிக்கும் தன் சாஸ்திரமாகிற உதகத்தால் பள்ளமான இடங்களைப்போல் சீக்கிரமே பூர்ணமாய் செய்தார். மேடான இடங்களை நிறப்பமாட்டாதது போல் முக்திக்கு அருகமில்லாத துர்ஜனங்களை அனுகூலப்படுத்தவில்லை. 29. வழியில் எல்லா ஜனங்களுக்கும் ஆச்சரியத்தை உண்டுபண்ணும்படியான பல காரியங்களைச் செய்து வந்ததால் அவர்களால் பூஜிக்கப்பட்டவராய் ஸ்ரீமத்வாசாரியார் உடுபிவந்து சேர்ந்து அவ்வூரில் விளங்கும் ஸ்ரீ அநந்தேச்வரனெனப்படும் நாராயணனை நமஸ்கரித்தார். 30. பிறகு அவர் அங்கிருந்த தன் குருவான அச்யுதப்ரேக்ஷாசாரியாரை நமஸ்கரிக்கவும் அவர் ஊருக்கு திரும்பிவந்தவரும் நாராயணனுடைய அன்பிற்கு ஆளானவருமான பூர்ணப்ரக்ஞரான ஸ்ரீமத்வாசாரியாரைப்பார்த்து எவ்வளவு ஆனந்தமடைந்தாரோ அதற்கு அளவேயில்லை. 31. ஸ்ரீமத்வாசாரியாருக்கு முந்தி அச்யுதப்ரேக்ஷாசாரியாரிடமிருந்து ஸந்யாசம் பெற்றிருந்த ஜேஷ்டயதி என்பவர், ஸ்ரீமத்வாசாரியாரால் தான் வந்துசேருவதற்கு முன்னமேயே தன் சிஷ்யர்வழியாக இவருக்கு அனுப்பப்பட்டிருந்த இணையற்றதான மத்வபாஷ்யத்தைப்பார்த்து மேலானப்ரீதியை அடைந்திருந்தார். அவர் வெகுநாளாய் பார்க்க பிரியங்கொண்டிருந்த சுப்ரமான புன்சிரிப்புகொண்ட ஸ்ரீமத்வாசாரியாரை நேரில் பார்த்துவிட்டு அதைவிட மேலானதாயுள்ள ப்ரீதியை அடைந்தார். 32. பூர்ணப்ரக்ஞராகிய ஸமுத்திரத்தினின்றும் ஸுகத்தைத் தருவதாயுள்ள பிரம்மஸூத்ர பாஷியமாகிய ஜலத்தைஜேஷ்டயதியாகிய வர்ஷாகாலத்தியமேகம்போல்கிரஹணம் செய்து ஜனங்களுக்கு பாடப்ரவசனம் சொல்லி அவர்களை கிரகிக்கும்படி செய்ததே தவிர, மேகங்கள் ஜலத்தை வர்ஷித்தபின் சுயம் ஜலசம்பந்தமில்லாமல்போவதுபோல் இவர் பாஷியத்தை விட்டுவிடவில்லை. இந்த மேகம் அந்த ஜலத்தை விடாமல் அதிலேயே ஈடு

208168

பட்டிருந்தது என்பது ஆச்சரியகரமானது. 33. பிறகு சமயத்திற்கேற்றதை அறிந்தவரும் எல்லோரையும் அனுஸரிக்கும் ஆசாரமுடையவருமான ஸ்ரீமத்வாசாரியார் இயற்கையாய் ஸாதுஜீவனாய் இருப்பவரும் கலிகாலத்தின் பலத்தால் குச்சிதமான அத்வைத மதத்தில் ஈடுபட்ட புத்தியுள்ளவருமான தன் குருவாகிய அச்யுதப்ரேக்ஷாசாரியாருக்கு தன் பிரம்மஸூத்திர பாஷ்யத்திலுள்ள மேலான குணஸமூகங்களை எல்லாம் எடுத்துச்சொன்னார். 34. விசாலமான புத்தியுடைய ஸ்ரீமத்வாசாரியார் குருவுக்கு ஸூத்திரார்த்தத்தை எடுத்துச்சொல்லும்பொழுது திடமான யுக்திகளைக் கொண்ட வார்த்தைகளால் அவருக்கு பன்முறை எடுத்துச் சொல்லியும், அத்வைத சாஸ்திரத்தில் வெகுதிடமாய் ஈடுபட்ட புத்தியுடைய அவருடைய மனதில் பதிந்திருப்பதாயுள்ள தன் சாஸ்திரத்தில் ருசியில்லாமைக்கு காரணமான தோஷம் இன்னது என்பதை ஓர் வைத்தியன் சிகிச்சை செய்யும்பொழுது உபாதியுள்ளவனுக்கு அன்னாதிகளில் அருசி ஏற்பட்டிருப்பதற்கு மூலகாரணமாயுள்ள தோஷம் இன்னதென்பதை யோஜிப்பதுபோல தன் மனதில் யோசனை செய்தார். 35. பரமஹம்ஸர்களாகிய ஸன்யாஸிகளில் சிரேஷ்டரான ஸ்ரீமத்வாசாரியார் திடமான தன் சித்தாந்தத்தில் சொல்லியுள்ள யுக்திகளால் அந்த அச்யுதப்ரேக்ஷாசாரியார் சொல்வதை கண்டித்தும், அவரைவிட மிகவும் அதிகமான சப்தத்தின் பெருமையால் அத்வைதத்திலுள்ள பாதகங்களின் தீமையைக் காட்டியும் குருவின் மனஸினின்றும் கலியால் ஏற்பட்ட தோஷத்தை நீக்கினார். எப்படி எனில் ஹம்ஸ சிரேஷ்டமானது, ஏகதிருஷ்டியுள்ள காக்கையை ஸமர்த்தமான தன் இறகுகளின் ஆட்டத்தால் அடித்தும் மிகவும் அதிகமான சப்தத்தின் பெருமையால் பயமுறுத்தியும் மானஸ ஸரோவரத்தினின்றும் விரட்டும். 36. ஸ்ரீமத்வாசாரியாரின் ஸச்சாஸ்திரத்தில் அபிருசி ஏற்படாததற்கு காரணமாயுள்ள கலியின் தோஷம் போனபின்பு, களங்கம் போன சந்திரன்போலும் மலர்ந்துபோன தாமரைபோலும் நிர்மலமாயுள்ள சரத்காலத்திய ஜலம்போலும் அச்யுதப்ரேக்ஷாசாரியாரின் சித்தமானது வெகு சுத்தமாய் பிரகாசமடைந்தது. 37. முன்பு குச்சிதமான அத்வைத சித்தாந்தத்தைக் கேட்டிருந்து



அதில் ஆக்ரஹமுடைய அந்த அச்யுதப்ரேக்ஷாசாரியார் தாகமுடைய ஒருவன், முன்பு மோகத்தால் உப்புஜலத்தை நல்லஜலமாக எண்ணி அடிக்கடி பானம்செய்திருந்து பின்பு மதுரமான ஜலத்தை குடித்தால் எப்படியோ அப்படி மத்வ சாஸ்திரத்தைக்கேட்டு பரமானந்தமடைந்தார். 38. அநேக விஷயங்களை தெரிந்தவரான ஸ்ரீமத்வாசாரியாராகிய ஆகாயத்தை ஆசிரயமாகக்கொண்டவர்களான அந்த அச்யுதப்ரேக்ஷாசாரியாரும் அவருடைய சிஷ்யரான ஜேஷ்டயதியும் எப்படி ஆகாயத்தை ஆசிரயித்தவர்களாய் சூரிய சந்திரர்கள் அழகிய சரத்காலம் முதலியவைகளில் பிரகாசிப்பதால் பகலும் இரவும் மனுஷ்யர்களைமோகித்து தடுப்பதாயுள்ள இருண்ட இருளை நிவிர்த்திப்பதுபோல், பகலும் இரவும் ஓயாமல் ஸ்ரீமத்வ சாஸ்திரத்தை விசாரம் செய்து மனுஷ்யர்களின் தத்வஞானத் திற்கு ப்ரதிபந்தகமாய் அவர்களிடம் அதிகமாய் குடிகொண்டிருந்த மித்யாஞானத்தை போக்கிக்கொண்டனர்.

(தொடரும்)

# விதவா விவாக கண்டனம்.

---

(முன் 47-வது பக்கம் தொடர்ச்சி).

(6) காமம் து க்ஷபயேத் தேஹம் புஷ்ப மூலபலைச்சுபை: ।
நதுகாமாபி க்ருண்ஹீயாத் பத்யௌப்ரேதே பரஸ்யச ॥
(மனு 5-வது அத்தியாயம்.)

பதி இறந்தபின் அவனுடைய பத்னி புஷ்பங்கள் கிழங்குகள் பழங்கள் இவைகளை புஜித்து தன்னாலியன்றவளவு சரீரத்தை ஒடுக்கவேண்டும். அன்னியனுடைய பெயரைக்கூட எடுத்துச் சொல்லலாகாது.

(7) நான்யோத்பன்னா ப்ரஜாஸ்தீஹ நசாப்யன்ய பரிக்ரஹே ।
நத்விதீயஸ்ச ஸாத்வீனாம் க்வசித் பர்த்தோ பதிச்யதே ॥ (மனு).

முதலாவது விவாகம் செய்துகொண்ட பதியினாலல்லாமல் அன்யனால் உண்டாக்கப்பட்ட பிள்ளையானது அன்யக்ஷேத்திரத்தில் உண்டாக்கப்பட்டதால் அவனுக்கும் அவளுக்கும் ஸந்ததியாகமாட்டாது. ஏனெனில் ஒரு சாதுவான ஸ்திரீக்கு இரண்டாவதான பர்த்தாவை எங்கும் விதிக்கப் படவில்லை.

(8) யஸ்மைதத்யாத் பிதாத்வேனம் ப்ராதாவானுமதே பிது: |
தம் சுச்ரூஷேத ஜீவந்தம் ஸம்ஸ்திதம் ச நலங்கயேத் || (மனு)

தந்தையோ அவனுடைய அனுமதியின்பேரில் அவள் சகோதரனோ ஒரு கன்னிகையை ஒருவனுக்கு தானம் செய்துவிட்டால் அந்த புருஷனை அந்த பெண் தன் ஆயுள் நாள் முடிய சுச்ருஷை செய்துவர வேண்டும். அவன் இறந்துபோனாலும் அவனை அதிக்ரமித்து அவள் நடக்கலாகாது. என்றிவ்வாறு மனு அபிப்பிராயப்பட்டிருக்கையில் விதவையானவள் மறுமணம் செய்து நறுமலர் சூட்டி பர புருஷனை கட்டியணைத்து முத்தமிடுவது மனுவுக்கு சம்மதமென்று என்னனுவமேதா? மனு பின்னும் சொல்லுவதாவது.

(9) பாணிக்ராஹஸ்ய ஸாத்வீஸ்திரீ ஜீவதோவா ம்ருதஸ்யவா |
பதிலோகமபீப்ஸந்தீ நாசரேத் கிஞ்சிதப்ரியம் | (மனு)

ஸாத்வியான ஸ்திரீ பர்த்தா ஜீவித்திருந்தாலும் சரியே இறந்து போனாலும் சரியே பதிலோகத்தில் அபேக்ஷை வைத்து அவனுக்கு பிரியமில்லாததை செய்யக்கூடாது என்று இதன் பொருள். இப்படி தடுத்திருக்கும்பொழுது தன்னுடைய பாரியாள் அன்யனோடு கொஞ்சிக்களிப்பது அவனுக்கு சம்மதமாகவிருக்குமா?

(10) நான்யஸ்மின் விதவா நாரீ நியோக்தவ்யா த்விஜாதிபி: |
அன்யஸ்மின் ஹி நியுஞ்ஜானா: தர்மம் ஹன்யு: ஸநாதனம் || (மனு)

பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் எனப்படும் த்விஜர்கள் தம் விதவையை அன்னியனிடம் பிரவேசிக்கச்செய்யக்கூடாது. அப்படிச் செய்பவர்கள் ஒரு ஸ்திரீக்கு ஒரு புருஷன்தான் என்னும் ஸநாதன தர்மத்தைக் கெடுத்தவர்களாய் ஆவார்கள்.

(11) நோத்வாஹிகேஷு மந்த்ரேஷு நியோக: கீர்த்யதே க்வசித் |
நவிவாஹ விதாவுக்தம் விதவா வேதனம் புன: || (மனு)

விவாக மந்திரங்களில் எங்கும் விதவையிடம் தேவன் பிரவேசிக்கலாமென்னும் விஷயம் சொல்லப்படவில்லை. மேலும் விவாகத்தை விதிக்கும் எந்த சாஸ்திரத்திலேயும் விதவைக்கு இரண்டாம் விவாகம் உண்டென்றும் சொல்லப்படவில்லை.

இதைக்காட்டிலும் எவ்வளவு ஸ்பஷ்டமாக விதவா விவாகத்தை மனு தடுக்கமுடியுமென்பதை வாசகர்கள் கவனிப்பார்களாக.

(12) நதத்வா கஸ்யசித் கன்யாம் புனர்தத்யாத் விசக்ஷண: |
தத்வா புன: ப்ரயச்சன்ஹி ப்ராப்னோதி புருஷாந்ருதம் || (மனு)

ஒருவனுக்கு ஓர் கன்னிகையைக் கொடுத்துவிட்டு மற்றொருவனுக்கு சாஸ்திரக்ஞன் எவனும் அவளையே தரமாட்டான். அப்படியே அவன்



தந்தானென்றால் அவன் புருஷாந்ருதமென்னும் நரகத்தை அடைவான். ஒரு முறை ஒருவனுக்கு கொடுப்பதாய் வாக்தானம் செய்து, வேறொருவனுக்கு விவாகம் செய்து வைப்பவனுக்கே இவ்வளவு அனர்த்தம் இருக்கும்பொழுது விதவையை புனர் விவாகம் செய்வதற்கு சாஸ்திரத்தில் இடம் இருக்குமாவென்பது கவனிக்கவேண்டியதாகும்.

(13) ஸக்ருதம்சோ நிபததி ஸக்ருத்கன்யா ப்ரதீயதே |
ஸக்ருதாஹ ததானீதி த்ரீண்யேதானி ஸதாம்ஸக்ருத் || (மனு)

பாகம் என்பது ஒரு தடவைதான். கன்யாதானம் ஒரு தடவைதான் தருகிறேனென்ற வாக்தானமும் ஒரே தடவைதான். இம்மூன்றும் பொது ஜனங்களுக்கு ஒரே தடவை.

(14) தேவராச்ச ஸுதோத்பத்தி: தத்தா கன்யா ப்ரதீயதே |
நயக்ஞே கோவத: கார்ய: கலௌ நசகமண்டலு: ||
(விருத்தபராசரர்).

தேவரனால் விதவையிடம் ஆண் குழந்தையை உண்டாக்குவதும் ஒரு தரம் தானம் செய்யப்பட்ட கன்னிகையை மறுமுறை தானம் செய்வதும் யக்ஞத்தில் பசு வதை செய்வதும் கமண்டலுவை தரிப்பதும் கலியுகத்தில் கூடாது.

(15) இப்படியே க்ரதுவும் சொல்லுகிறார்.

(13) ஊடாயா: புனருத்வாகம் ஜேஷ்டாம்சம் கோவதம்ததா ||
கலௌ பஞ்ச நகுர்வீத ப்ராத்ருஜாயாம் கமண்டலும்.
(ஆதித்ய புராணம்)

ஒரு தரம் விவாகம் செய்தவளுக்கு புனர் விவாகம் செய்வது, ஜேஷ்ட குமாரனுடைய பாகமென்று சொத்தில் ஒதுக்கிவைப்பது, யக்ஞத்தில் பசுவைக்கொல்வது, சகோதரனுடைய பார்யையிடம் சந்தானத்தை உண்டாக்குவது, கமண்டலுவைப்பிடிப்பது, ஆக ஐந்தும் கலியுகத்தில் கூடாது.

(18) தத்தாயாஸ்சைவ கன்யாயா: புனர்தானம் பரஸ்யச|
வர்ஜயீத கலௌ||
(பிருஹந்நாரதீயம்)

ஒருவனுக்கு கொடுத்த கன்னிகையை மற்றொருவனுக்கு மறுமுறை கொடுப்பதை கலியுகத்தில் வர்ஜனம் செய்யவேண்டும்.

(19) அவிப்லுத ப்ரம்மசர்ய: லக்ஷண்யாம் ஸ்திரியம் உத்வஹேத்||
அநந்யபூர்விகாம் காந்தாம் அஸபிண்டாம் யவீயஸீம்||
(யாக்ஞவல்க்யர்)

ஒருவன் தன் பிரம்மசரிய விரதம் கெட்டுப்போகாமல் சம்ரக்ஷணைசெய்து வைத்துக்கொண்டு இலக்ஷணமுள்ள ஓர் கன்னிகையை விவாகம்செய்து கொள்ளவேண்டும். அந்த கன்னிகை அதற்குமுன் தானத்தினுலோ உபயோகத்தாலோ அன்னியனுல் கைக்கொண்டவளாய் இருக்ககூடாது. அவள் தன் கோத்திரத்திலேயே பிறந்தவளாய் இருக்ககூடாது. வயதில் தனக்கு குறைந்தவளாய் இருக்கவேண்டும் என்று யாக்ஞவல்க்யர் சொல்லுகிறுர்.

இவர் தன் ஸ்மிருதியில் இதற்குமுன் சுலோகங்களில் பிரம்மசர்யத்தைக் கடந்தபுருஷனுக்கு விவாகம் உண்டென்று சொல்லி இந்த சுலோகத்தில் விவாகம் செய்து கொள்ளவேண்டிய கன்னிகை எப்படி இருக்கவேண்டு மென்பதைச் சொல்லியிருக்கிறுர். பிரதானஸ்மிருதிகாரரான யாக்ஞ வல்க்யரும் புனர்விவாகத்தை எவ்வளவு ஸ்பஷ்டமாய் இங்கு தடுத்திருக் கிறுர் என்பதை அவசியம் கவனிக்கவேண்டும்.

(20) அக்ஞானுத்து த்விஜோயஸ்து விதவாமுத்வஹேத் யதி।
பரித்யஜ்ய விதித்வைனும் ப்ராயச்சித்தம் ஸமாசரேத்॥

(ஆசுவலாயனர்)

பிராம்மணன் க்ஷத்திரியன் வைசியனுகிய த்விஜன் ஒருவன் தெரியாமல் அதாவது அக்ஞானத்தால் விதவையை விவாகம் செய்துகொண்டிருந் தால் அவள் விதவை என்று தெரிந்த க்ஷணம் அவளை விட்டுவிட்டு ப்ரா யச்சித்தம் செய்துகொள்ளவேண்டும். இந்த ஸ்மிருதி கர்த்தாவான ஆசுவலாயனர் தர்மசாஸ்திர சம்பந்தமான சூத்திரங்களைச்செய்த மகான் என்பதை கவனிக்கவேண்டும்.

(21) ஸப்த பௌனர்பவா. கன்யா: வர்ஜனீயா: குலாதமா:॥
வாசாதத்தா மனோதத்தா க்ருதகௌதுகமங்களா:॥
உதகஸ்பர்சிதாயாச யாச பாணிக்ரஹீதகா:॥
அக்னிம் பரிகதாயாச புனர்பூ ப்ரபவாசயா॥
இத்யேதா: காசியபேனோக்தா: தஹந்தி குலமக்னிவத்॥
ப்ரரோஹேதக்னினுதக்த: பாதபஸ்ஸ ஒசிராதபி॥
நது பௌனர்பவாதக்தம் குலம் ஜாது ப்ரோரஹதி॥

(காசியப

புனர்பூ எனப்படுவார்கள் ஏழுவகை. அதமர்களான அந்த கன்னிகை களை விவாகம் செய்துகொள்ளாமல் விலக்கவேண்டும். அவர்கள் யாரெ னில் 1 ஒருவனுக்கு விவாகம்செய்துகொடுப்பதாய் வாக்தானம் செய்ய பட்டவள் 2 அப்படியே மனதால் நிச்சயம்செய்து மனோதானம் செய்ய



பட்டவள் 3 அந்த விவாகசம்பந்தமான மங்களஸ்னானம் செய்யப்பட்ட வள் 4 ஒருவனுக்கு கொடுபட்டதாய் தாரைவார்த்தலை நிறைவேற்றிக் கொண்டவள் 5 ஒருவனுல் பாணிக்கிரஹணம் செய்துகொள்ளப்பட்ட வள் 6 அந்த பர்த்தாவுடன் அக்னியின் எதிரில் ஓமம் செய்துமுடித்துக் கொண்டவள் 7 இந்த வகை புனர்பூவின் வயிற்றில் பிறந்தவள் ஆகிய இவ்வேழுவகையாரும் புனர்பூக்கள் என்று கசியபர் சொல்லுகிறுர். இவர்கள் விவாகம் செய்துகொண்டு புகுந்த குலத்தை அக்னிபோல் எரித்துவிடுவார்கள். அக்னியால் கொளுத்தப்பட்டுபோன விருக்ஷம் வெகுவருஷங்கள் கழிந்தபின்பாவது துளிர்க்கலாம். புனர்பூக்கள் எரித்த குலம் ஒருநாளும் வளராது.

(22) பர்த்தரிப்ரேதே ப்ரம்மசர்யம் ததன்வாரோகணம் வா

(விஷ்ணு)

பர்த்தா இறந்தபின் ஸ்திரீகள்செய்யவேண்டியது பிரம்மசரிய விரதத்தை அனுஷ்டானம் செய்யவேண்டும். அல்லது உடன்கட்டை ஏறவேண்டும்.

(23) தத்தாம் குப்தாம் ச வர்ஜயேத் (ஆபஸ்தம்பர்)

ஒருவனுக்கு வாழ்க்கப்பட்டவளையும் மறைக்கவேண்டியதாயிருக்கும் சரீரங்களின் அவயவ பூர்த்தியுள்ளவளையும் விவாகம்செய்துகொள்ளாமல் விலக்கவேண்டும்.

(24) கிருகஸ்தஸ்ஸத்ருசீம் பார்யாம் விந்தேத அனந்ய பூர்வாம் யவீயஸீம் அஸமான ப்ரவரை: விவாஹ:।

(கௌதமர்)

ஒரு கிருகஸ்தன் தனக்குத் தகுந்தவளைத்தான் பார்யையாக அடைய வேண்டும். அவள் தானத்தினுலோ அல்லது சம்போகத்தினுலோ வேறொரு புருஷனுக்கு ஸம்பந்தப்படாதவளாய் இருக்கவேண்டும். வயதில் தன்னைவிட தாழ்ந்தவளாய் இருக்கவேண்டும். அவள் வேறு கோத்திரத்தில் பிறந்தவளாய் இருக்கவேண்டும். அப்பேர்ப்பட்டவளை விவாகம் செய்துகொண்டால்தான் விவாகம் என்பது ஆகும்.

(தொடரும்:)

# கேசவாதி ரூபங்களின் விபரம்.

நாம் தினந்தோறும் ஆசமனம் செய்யும்பொழுது உச்சரிக்கும் கேசவன் நாராயணன் முதலான இருபத்திநான்கு பகவன் மூர்த்தி களின் விவரங்கள் நன்கு தெரிந்தால் அவர்களின் தியானம் மன

தில் நிலைநிற்குமாதலால் ஸ்ரீபகவத்பாதாள் அறிவித்தபடி அது இங்குஸா்லபமாய் அறியும் வண்ணம் காட்டப்படுகிறது.

[குறிப்பு:--1 மூர்த்திகளின் பெயர், 2 வலதுபக்கம் கீழ்கையில், 3 வலதுபக்கம் மேல்கையில், 4 இடதுபக்கம் மேல்கையில், 5 இடதுபக்கம் கீழ்கையில், 6 பாரியாளின் பெயர்.]

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| கேசவன் | பத்மம் | சங்கம் | சக்ரம் | கதை | ஸ்ரீதேவி |
| நாராயணன் | சங்கம் | பத்மம் | கதை | சக்ரம் | லக்ஷ்மி |
| மாதவன் | கதை | சக்ரம் | சங்கம் | பத்மம் | கமலா |
| கோவிந்தன் | சக்ரம் | கதை | பத்மம் | சங்கம் | பத்மா |
| விஷ்ணு | கதை | பத்மம் | சங்கம் | சக்ரம் | பத்மினி |
| மதுஸூதனன் | சக்ரம் | சங்கம் | பத்மம் | கதை | கமலாலயா |
| த்ரிவிக்ரமன் | பத்மம் | கதை | சக்ரம் | சங்கம் | ரமா |
| வாமனன் | சங்கம் | சக்ரம் | கதை | பத்மம் | விருஷாகபாயீ |
| ஸ்ரீதரன் | பத்மம் | சக்ரம் | கதை | சங்கம் | தன்யா |
| ஹிருஷீகேசன் | கதை | சக்ரம் | பத்மம் | சங்கம் | விருத்தி |
| பத்மநாபன் | சங்கம் | பத்மம் | சக்ரம் | கதை | யக்ஞா |
| தாமோதரன் | பத்மம் | சங்கம் | கதை | சக்ரம் | இந்திரா |
| சங்கர்ஷணன் | கதை | சங்கம் | பத்மம் | சக்ரம் | ஹிரண்யா |
| வாஸுதேவன் | கதை | சங்கம் | சக்ரம் | பத்மம் | ஹிரிணீ |
| ப்ரத்யும்னன் | சக்ரம் | சங்கம் | கதை | பத்மம் | ஸத்யா |
| அநிருத்தன் | சக்ரம் | கதை | சங்கம் | பத்மம் | நித்யா |
| புருஷோத்தமன் | சக்ரம் | பத்மம் | சங்கம் | கதை | நந்தா |
| அதோக்ஷஜன் | பத்மம் | கதை | சங்கம் | சக்ரம் | க்ரயீ |
| நரஸிம்ஹன் | சக்ரம் | பத்மம் | கதை | சங்கம் | ஸுதா |
| அச்யுதன் | கதை | பத்மம் | சக்ரம் | சங்கம் | ஸுநந்தா |
| ஜநார்த்தனன் | பத்மம் | சக்ரம் | சங்கம் | கதை | ஸுந்தரி |
| உபேந்திரன் | சங்கம் | கதை | சக்ரம் | பத்மம் | வித்யா |
| ஹரி | சங்கம் | சக்ரம் | பத்மம் | கதை | ஸுசீலா |
| ஸ்ரீகிருஷ்ணன் | சங்கம் | கதை | பத்மம் | சக்ரம் | ஸுலக்ஷணா |



# விஷ்ணு மாயை.

## I மகிஷாஸுரமர்த்தனியின் சரிதை.

மார்கண்டேய புராணத்தில் சொல்லப்படுவதாவது:—

முன்பு ஸ்வாரோசிஷ மன்வந்தரத்தில் சைத்ரவம்சத்தில் பிறந்த ஸுரதன் என்ற அரசன் தன் ராஜ்யம் சத்ருக்களால் அபகரிக்கப்பட்டு வனத்திற்கு ஓடிப்போயும், தன் ராஜ்யம் தன் மந்திரிமார்கள் தன் பிரஜைகள் என்று அபிமானங்கொண்டு அவர்களின் யோகக்ஷேமத்திலேயே கவலை கொள்ளவும், அம்மாதிரியே ஸமாதி என்ற வைசியனும் தன் பெண்டு பிள்ளைகளால் துறக்கப்பட்டும் அவர்களிடம் கவலை கொண்டிருக்கவும், இவ்விருவர்களும் ஓர் ரிஷியை இவ்வாறு அபிமானம் ஏற்பட காரணம் யாது என்று பிரசினம் செய்ய, இது விஷ்ணுவின் அத்யத்புதமான மாயை என்று அதன் மகிமையை விவரித்துச்சொன்னார். இந்த விஷ்ணு மாயை எல்லா சராசர பிரபஞ்சத்தை வியாபித்திருப்பதாயும் மகா வித்தை மகா மாயை மேதை ஸ்மிருதி தபஸ் புத்தி பசி தாகம் முதலான பல ரூபங்களாய் பலரிடமிருப்பதாயும் அறிவித்தார். அந்த மகா மாயை எப்பொழுது ஆவிர்பவித்தாள் என்று கேட்டதற்கு அந்த ரிஷி சொன்னதாவது:—பகவான் ப்ரளயகாலத்தில் யோகநித்திரை செய்துவந்த சமயம அவருடைய காது அழுக்கால் உண்டான மது கைடபன் என்ற இரு அஸுரர்கள் அவருடைய நாபி கமலத்திலிருந்த சதுர்முகனை கொல்ல எத்தனிப்படவும், பிரம்மா பயந்து பகவான் விழித்தெழ அவருடைய கண்களில் வசித்துவந்த ஸ்ரீதேவியான யோகநித்திரையை அவரை விட்டு விலகும்படி மகா ஸ்தோத்திரம் செய்ய பகவானுடைய அத்யத்புதமான சக்தி ஓர் ஸ்திரீ ரூபத்துடன் வெளிவந்து நின்றாள். உடனே பகவான் விழித்தெழுந்து அவர்களுடன் 5000 வருஷம் யுத்தம் செய்தும் பிரயோஜனப்படாமல், அந்த மகாமாயை மதுகைடபர்களை மோகித்து விடவும், அவர்கள் சுயம் பகவானாலேயே ஜலமில்லாத இடத்தில் தாங்கள் கொல்லப்படவேண்டுமென்று அவரை

வரனைக்கேட்டுவிட, அவ்வாறே பகவான் அவர்களைக் கொன்றார். இந்த விஷ்ணு சக்தியாகிய மகாமாயை எப்போதும் நித்தியமாய் அழிவற்றவளாயிருப்பினும் இச்சமயம்தான் பிறந்தவளாவாள். இவள் பலசந்தர்பங்களில் ஆவிர்பவித்து பலநாமம்பெற்றிருக்கிறாள். அவளுடைய அவதாரங்களில் ஒன்று மஹிஷாஸுரமர்த்தனி. அவளுடைய சரிதை பின்வருமாறு:—

ஒரு சமயம் எருமைக்கடா உருவங்கொண்டிருந்த மஹிஷன் என்னும் அசுரன் வெகு பலிஷ்டனாய் அசுரர்களுக்கு ராஜாவாய் இருக்கும்பொழுது தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நூறு வருஷகாலம் மகாயுத்தம் நடந்து மகிஷாஸுரன் த்ரைலோக்ய ராஜ்யத்தையும் பிடுங்கி இந்திரன் சந்திரன் யமன் முதலிய திக்பாலகர்களையும் ஆதிபத்யமில்லாமல் வெளியே விரட்டிவிட, எல்லா தேவர்களும் சதுர்முகனை முன்னிட்டு விஷ்ணுவும் சிவனும் இருந்த இடத்திற்கு போய் முறையிடவும், அவர்களுக்கு மகாகோபம் ஏற்பட்டும், பிறகு எல்லா தேவர்களுக்கும் கோபம் ஏற்பட்டும், அச்சமயம் எல்லா தேவர்களினின்றும் ஒரு தேஜஸ் வெளியாகி அந்த மகாமாயையே ஒரு ஸ்திரீரூபங்கொண்டாள். சிவனிடமிருந்து வெளிவந்த தேஜஸ் அந்த தேவியின் முகமாகவும், யமனுடைய தேஜஸ் அவளுடைய கேசங்களாகவும், விஷ்ணுவின் தேஜஸ் பாஹுக்களாகவும், சந்திரனுடைய தேஜஸ் ஸ்தனங்களாகவும், இந்திரனுடைய தேஜஸ் இடுப்பாகவும், வருணனுடைய தேஜஸ் துடைகளாகவும், பூமியின் தேஜஸ் பின்புறமாகவும், பிரம்மாவின் தேஜஸ் கால்களாகவும், சூரியனுடைய தேஜஸ் கால் விரல்களாகவும், வஸுதேவர்களின் தேஜஸ் கை விரல்களாகவும், குபேரனுடைய தேஜஸ் நாஸிகையாகவும், ப்ராஜாபதிகளின் தேஜஸ் பற்களாகவும், அக்னியின் தேஜஸ் மூன்று கண்களாகவும், ஸந்தியாகாலத்தின் தேஜஸ் புருவங்களாகவும், வாயுவின் தேஜஸ் காதுகளாகவும். இவ்வாறு எல்லா தேவர்களின் தேஜஸ் அவளுடைய ஒவ்வொரு அவயவங்களாகவும் மாறிற்று. தேவி ஒரு தேஜஸ்ஸின் பர்வதத்தை போலவே இருந்தாள். எங்கும் ஒரே ஜ்வாலைமாலையாக பிரகாசித்திருந்தாள். மகிஷாஸுரனால் மகாஸங்கடமடைந்த தேவர்கள் எல்லோரும் அவளைக்கண்டு பரமானந்தமடைந்து தம்தம் ஆயுதங்



களினின்றும் ஒரு அம்சத்தை பிடுங்கி எடுத்து அந்த அம்சத்தை அந்தந்த ஆயுதமாக அவளுக்கு ஸமர்ப்பணம் செய்தனர். பரமசிவன் சூலாயுதத்தையும் விஷ்ணு சக்ராயுதத்தையும் வருணன் சங்கத்தையும், அக்னி சக்தி ஆயுதத்தையும், வாயுபகவான் தனுஸ் பாணம் நிறைந்த அம்பாரத்தூணி இவைகளையும், இந்திரன் வஜ்ஜிராயுதம் ஐராவதத்தின் மணி இவைகளையும், யமன் தண்டாயுதத்தையும், வருணன் பாசாயுதத்தையும், ப்ராஜாபதி ஜபமாலையையும், பிரம்மா கமண்டலுவையும், சூரியன் எல்லா மயிர்கண்களில் தன் கிரணங்களையும், காலன் கத்தி கேடயத்தையும், க்ஷீரஸமுத்திரம் முக்தாஹாரம் கர்ணகுண்டலங்கள் பீதாம்பரம் சூடாமணி அர்த்த சந்திர பூஷணம் பாஜோபந்து பாதஸரம் காசுமாலை இரத்தின மோதிரங்கள் முதலிய ஆபரணங்களையும், விச்வகர்மா பரசு ஆயுதம் அநேக அஸ்திரங்களையும். ஸமுத்ரராஜன் தலையில் சூட்டிக்கொள்ள எப்போதும் வாடாத கமலமலர் மாலையையும் கையில் தரிக்க அழகான கமலமலரையும், ஹிமயமலை அவள் வாஹனத்திற்காக ஓர் பெரிய சிம்ஹத்தையும் பலரத்தினங்களையும், குபேரன் ஸுரா பானம் செய்யும் பாத்திரத்தையும் ஆதிசேஷன் மஹா மாணிக்யத்தால் அலங்காரம் செய்யப்பட்ட நாகஹாரத்தையும், இவ்வாறு அநேக தேவர்கள் அநேக வஸ்துக்களை அவளுடைய உபயோகத்திற்கு தந்தனர். இவைகளைப் பெற்று பத்துதிக்கிலும் நடுங்கும்படி அட்டகாசம் செய்தாள். அதைக்கேட்டு எல்லா உலகங்களும் நடுங்கின. ஸமுத்ரங்கள் கலங்கின. பூகம்பம் ஏற்பட்டது. குலாசலங்கள் சரிந்து விழுந்தன. ஸிம்ஹத்தை வாகனமாகக்கொண்ட அந்த மகா சக்தியைப் பார்த்து ரிஷீசுவரர்கள் நமஸ்கரித்து விசித்திரமாக ஸ்தோத்திரம் செய்தனர். இதைக்கேட்டு மஹிஷாஸுரன் திடுக்கிட்டு அஸுர சைனியங்களுடன் கூடி சப்தம் வந்த திக்கை நோக்கி வந்து அம்பிகையைப் பார்த்தான். ஸிம்ஹ வாஹனத்தின்மீது ஆயிரம் புஜங்களுடன் வீற்றிருக்கிறாள். பத்து திக்கையும் வியாபித்திருக்கிறாள். கோரமான எண்ணிறைந்த ஆயுதங்களை தரித்திருக்கிறாள். அடிக்கடி தனுஸ்ஸை இழுத்து டங்காரம் செய்கிறாள். இந்த அதி அற்புத ரூபத்தைக்கண்டு மஹிஷாஸுரன் திடுக்கிட்டான். தன்னைக்கொல்லவந்த மிருத்யுவோ என்று

சங்கித்தான். கோபத்தால் அட்டகாசம் செய்தான். அவளுடன் யுத்தம் செய்வதாய் நிச்சயித்தான். சேனாதிபதியான சிக்ஷுரன் என்பவனை அநேக கோடி அற்புதக்கணக்காயுள்ள தன் சதுரங்க சைனியங்களை தயார்செய்து யுத்தம் செய்ய ஆக்ஞையிட்டான். அவ்வாறே அஸுர சைனியம் கரை பிரண்ட பிரளயகாலத்து கடல்போல்வந்துசேர, அம்பிகை மகாகோபத்துடன் சுவாஸம்விட அதனின்றும் கணக்கற்ற கணங்கள் ஆயுதபாணிகளாய் உத்பவித்தனர். அம்பிகை தன் சைனியங்களுடன்கூடி அந்த அஸுர சைனியத்துடன் விசித்திர யுத்தம் செய்தாள்.

சூலாயுதத்தால் சிக்ஷுரனையும், சிம்ஹன வாஹனத்தால் சாமரனையும், முஷ்டியால் காராளனையும், கதாயுதத்தால் உத்தனையும், பிண்டிபாலமென்ற ஆயுதத்தாலும் பாணங்களாலும் அந்தகன், தாம்ரன், உக்ராஸ்யன், உக்ரவீர்யன் இவர்களையும், த்ரிசூலத்தால் பிடாலனையும், காலதண்டத்தால் காலனையும், இவ்வாறு பிரதானமான எல்லா அஸுரர்களையும் அந்த அம்பிகை நாசம் செய்துவிடவும், மஹிஷாஸுரன் எருமைக்கடாரூபத்துடன் யுத்தத்திற்கு வந்து அவளுடைய ஸைனியங்களைக் கொல்ல ஆரம்பித்தான். தன் கொம்புகளாலும், கால் குளம்புகளாலும், வாலாலும், சப்தத்தாலும், வேகத்தாலும், மூச்சுக்காற்றாலும் தேவியின் ஸைனியங்களைக் கொன்றான். தேவியின் சிம்ஹத்தைக் கொல்ல கொம்புகளால் மலைகளைப் பெயர்த்து வர்ஷித்தான். பயங்கரமாக சப்தித்தான். கால் குளம்புகள் பதிந்து பூமியே பிளந்து போயிற்று. வாலின் அடியால் கடல்கள் பெருகி எங்கும் வெள்ளமாயிற்று. மூச்சுக்காற்றால் சின்னாபின்னமாய் ஆகாயத்திலிருந்து மேகங்கள் பர்வதங்கள்போல் விழ ஆரம்பித்தன. இதைக்கண்டு தேவி மகா கோபங்கொண்டு பத்ர காளியாய் நின்றாள். அவனைக் கொல்ல நிச்சயித்தாள். கையிலுள்ள பாசக் கயிற்றை வீசி மகிஷாஸுரனை அசைய முடியாதபடி கட்டினாள். மகிஷன் உடனே எருமைக்கடா ரூபத்தைவிட்டு சிம்ஹ ரூபத்தை தரித்தான். கத்தியால் அந்த சிம்ஹத்தின் தலையை வெட்டிவிட அவன் கத்தி கேடயம் பிடித்து ஒரு ராக்ஷஸ ரூபம் கொண்டான். அந்த ராக்ஷஸனையும் தேவி கொன்றுவிட, மகிஷன் யானை உருவங்



கொண்டு ஸிம்ஹ வாகனத்தை துதிக்கையால் இழுக்க ஆரம்பித்தான். தேவி அந்த யானையின் துதிக்கையை கத்தியால் சேதித்து அதைக்கொன்றுவிட, மகிஷன் முன்போல எருமைக்கடா வேஷத்துடன் நின்று மகாயுத்தம் செய்தான். ஸ்தாவரஜங்கமாத்மகமான மூன்று லோகத்தையும் நடுங்கச்செய்தான். ஜகதம்பிகையான அந்த பத்ரகாளி சிரித்துக்கொண்டு கையில் வைத்திருந்த உத்தமமான கள்ளைக் குடித்தாள். அச்சமயம் அஸுரன் கர்ஜிக்கவும், இந்த ஸுரையை பானம் செய்கிறவரை உன் இஷ்டப்படிகர்ஜனம் செய். பிறகு உன்னைக்கொன்று விடுகிறேன் என்று சொல்லவும், மகிஷன் பெரிய பெரிய மலைகளைக் கெந்தி தேவியின்மீது வர்ஷித்தான். அவைகளை எல்லாம் பாணங்களால் பொடியாக்கி, வெகு வேகமாய் எருமைக்கடா ரூபத்துடன்கூடிய அவன்மீது ஏறி தன் காலால் அவனுடைய கழுத்தை கீழே அமுக்கி நசுக்கி, சூலத்தால் அவனை பலமாய்குத்தி, கத்தியால் அவனுடைய தலையைச்சேதித்து மகிஷாஸுரனை ஸம்ஹாரம் செய்தாள். ஸித்தர்கள், ஸாத்யர்கள், மருத்துகள்,வஸுக்கள், திக்பாலர்கள் முதலிய முப்பத்திமுக்கோடி தேவர்களும், மகரிஷி கூட்டங்களும், பூவுலகமும், புஷ்ப வர்ஷங்கள் வர்ஷித்து ஜய ஜயவென்று மகா ஸ்தோத்திரம் செய்ய அற்புதமான மகிஷாசுர மர்த்தனி கோலத்துடன் நின்றாள். அப்பொழுது தேவி மகேந்திரன்செய்த திவ்யமான ஸ்தோத்திரத்தால் மகிழ்ந்தவளாய் இந்த மகிஷாசுர மர்த்தன கதையைக்கேட்டு இந்த ரூபத்தை ஸ்மரணம் செய்கிறவர்களுக்கு தனம் தாரம் முதலிய ஸர்வ சம்பத்துகளும், ஸர்வாபீஷ்டங்களும் உண்டாகுமென்று அநேக வரன்களைக்கொடுத்து முன்போல் விஷ்ணு மாயையாய் மறைந்து சென்றாள்.

[குறிப்பு:—வீர வைஷ்ணவர்களான மாத்வர்கள் பலரின் குடும்பத்தில் மஹிஷாஸுர மர்த்தனி முதலிய தேவதைகளின் டாங்குகள் என்னும் ப்ரதிமைகள் குல தெய்வ விக்ரஹங்களாக பூஜிக்கப்படுவது, மேற்கண்ட சரிதையால் வைஷ்ணவ நிலைக்கு பாதகமாக இல்லை என்று நிரூபிக்க இடமிருக்கிறது. ப—ர்]

# உபன்யாஸக் கொத்துகள்.

## 1. மத்வமதக்ஞானம் துர்லபம்.

நண்பர்களே! அனந்தகோடி பிரம்மாண்ட நாயகனான ஸ்ரீ ஹரி நம்மைப்போன்றவர்களை பூமியில் சிருஷ்டிக்க ஆரம்பித்து சதுர்முகனின் ஐம்பது வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. அதுமுதல் நாம் அநேக பிறப்புகளை எடுத்து அநேக தண்டனைக்குள்ளாகி அநேக கஷ்டங்களை அனுபவித்து தற்போது ஹரிவாயுகளின் பரமானுக்ரஹத்தால் மோக்ஷத்திற்கு முக்யஸாதனமாயுள்ள அபூர்வமான இந்த வைஷ்ணவ ஜன்மத்தை அடைந்திருக்கிறோம். இப்பொழுதாவது ஸ்ரீமத்வமதஸித்தாந்தங்களின் தாத்பர்யத்தை நன்கு அறிந்து ஸ்ரீமத்வாசாரியாரின் உபதேசத்தின்படி ஸ்ரீ ஹரியின் ஞானத்தை சம்பாதித்து புனரபி ஜனனம் புனரபி மரணம் புனரபி ஜனனீ ஜடரே சயனம் என்றபடி திரும்பித்திரும்பி பிறப்பதும் இறப்பதுமான ஸம்ஸாரத்தை அடையாமல் பாதுகாத்துக்கொண்டு, மோக்ஷத்தையடையவேண்டும். ஹரி இப்பேர்ப்பட்டவர் என்ற அறிவால்தான் மோக்ஷமென்பது கிடைக்கும். மோக்ஷத்தைக்கொடுக்கும் பகவத்விஷயமான சரியானஞானம் மத்வசாஸ்திரத்தாலல்லாது வேறெந்த சாஸ்திரத்தாலும் ஏற்படமாட்டாது. அந்த சாஸ்திரத்தை அறிய இச்சை எல்லோருக்கும் சாமானியமாயும் ஏற்படமாட்டாது. அதற்கும் புண்யம் செய்திருக்கவேண்டும். பாபம் செய்திருந்தால் ஸ்ரீமத்வமதத்தின் மேன்மை மனதில் தோன்றவே மாட்டாது. அவருடைய சித்தங்களில் ஔதாசீன்ய புத்தியும் ஸாமான்ய புத்தியும் தான் உண்டாகும். அவ்வாறே ஸ்ரீ வேதவியாஸரும் கூறுகிறார்.

துர்லபோ மானுஷோ தேஹ: தேஹினாம் க்ஷணபங்குர:|
தத்ராபி துர்லபம்மன்யே வைகுண்ட ப்ரியதர்சனம்:||

நாம் தினம் ஸம்ஸாரத்தில் நமக்காகவும் நம் பெண்டு பிள்ளைகளுக்காகவும் நம்மை காப்பாற்றி வரும் யஜமானர் முதலியவர்களுக்காகவும் பலவகை காரியங்களைச் செய்கிறோம். "தசாவராணாம் தேஹானாம் ஸாதனானி கரோத்யயம்" என்று சொன்னபடி பிரதிதினமும் அவ்வாறு நாம் செய்யும் காரியங்களின் பலன்கள்—குறைந்த பக்ஷம் இன்னமும் பத்து ஜன்மங்கள் எடுத்து தொலைக்கும்படியான பாபங்களாய் இருக்கின்றன. புழு பூச்சி நாய் நரி முதலிய பல நூற்றுக்கணக்கான ஜன்மங்கள் எடுத்து நாம் அந்த பாபங்களைத் தொலைத்துக்கொண்டுவரும்



பொழுது, பஞ்சக்ஞானேந்திரியங்கள் பஞ்சகர்மேந்திரியங்கள் படைத்த மனுஷ்ய ஜன்மம் ஏதோ நாம் செய்த புண்ய விசேஷத்தால் கிடைக்கிறது. அந்த மனுஷ்ய சரீரமும் வெகுநாள் நீடித்திருப்பதாய் நம்ப இடமில்லை. நலினீ தளகத ஜலவத்தரளம் தத்வஜ்ஜீவனமதிசய சபலம் என்று தாமரை இலையின் மீதுள்ள ஜலம்போல் நிலையில்லாதது. வெகு ஸ்வல்ப காலத்திலேயே விட்டுப்பிரியக்கூடியதாய் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட மனுஷ்ய ஜன்மத்திலேயும் வைகுண்டனெனப்பெயருள்ள ஸ்ரீ ஹரி நாராயணரின் நண்பர்களைக்காண்பது மிகவும் அரிது. பகவானுடைய நண்பர்கள் யாரெனில் ப்ரியோஹி க்ஞானினோத்யர்த்தம் அஹம் ஸசமமப்ரிய: என்று பகவான் பகவத்கீதையில் சொன்னபடி ஞானிகள் தான் அவருடைய நண்பர்களாவார்கள். ஆனதால் மனுஷ்ய ஜன்மாவிலும் ஞானிகளின் தரிசனம் மகா புண்யம் செய்திருந்தால் தான் நமக்கு கிடைக்கும் என்றார். ஞானிகளைக் காண்பது ஏன்? அது வேண்டாமே? அதனால் என்ன பாதகமென்றாலோ, அதனால் வைகுண்டப்ரிய தர்சனம் துர்லபம் என்று பதில் கூறினார். பகவானுடைய நண்பராய் அவருடனேயே எங்குமிருந்துவரும் ஸ்ரீ வாயுபகவானின் தரிசனம் சாஸ்திரமாகிய ஸ்ரீமத்வமதக்ரந்தங்களின் க்ஞானம் அவர்களால் உபதேசிக்கப்படாமல் இல்லாமற் போய்விடும். ஸ்ரீமத்வாசாரியாரின் சாஸ்திரக்ஞானம் இல்லாமற்போனாலென்ன? அதனால் என்ன பாதகம் என்றால் அதற்கும் ஸ்ரீ வேதவியாஸர், வைகுண்டப்ரிய தர்சனம் துர்லபம் என்று பதில் கூறுகிறார். ஸ்ரீமத்வாசாரியாரின் சாஸ்திரத்தை சரியாய் அறியாமற்போனால் மோக்ஷமடைய சரியான ஸாதனங்கள் எவை என்பதே தெரியாமற்போகும். இதராளுடைய மதங்கள் அவைகளை சரியானபடி அறிவிப்பதில்லை. ஆகையால் வைகுண்டனான பகவானுடைய ப்ரியமான தர்சனமாகிய அபரோக்ஷ ஞானமானது துர்லபமாய் கிடைக்காமற்போகும். பகவத் அபரோக்ஷஞானம் எதற்காக? அதுவும் வேண்டாமே என்றால் அதனால் வைகுண்டப்ரிய தர்சனம் துர்லபம் என்றார். அபரோக்ஷ ஞானம் இல்லாவிடில் வைகுண்டரான பகவானின் ப்ரியர்களான அர்ச்சிராதி தேவதைகளின் தரிசனம் இல்லாமற் போகும். அவர் தரிசனமும் ஏன் என்றால் வைகுண்டப்ரிய தரிசனம் துர்லபம் வைகுண்டப்ரியரான வாயுபகவனாகிற சதுர்முகனின் தரிசனம் கிடைக்காமற்போகும். சதுர்முகனின் தரிசனமே எதற்காகவென்றால் அதற்கும் வைகுண்டப்ரிய தரிசனம் துர்லபம், வைகுண்டாகிய நாராயணனின் பிரியமான வைகுண்டாதி லோகங்களை பிறகு காணமுடியாது.

ஸாஜுன் ப்ரம்ம கமயதி என்ற ச்ருதியின்படி சதுர்முகன்தான் எல்லா ஜீவராசிகளையும் பரப்ரம்மமாகிய பகவானிடத்தில் கொண்டுபோய் விடுகிறார். ஆகவே வைகுண்டாதி மோக்ஷமடைய பிரம்மக்ஞானம் அவசியமாதலாலும் அந்த ப்ரம்மக்ஞானம் மத்வசாஸ்திரத்திலேயே ஏற்படுவதாலும் மத்வசாஸ்திரத்தை அறிய விருப்பமானது மகாபுண்யத்தால்தான் மனுஷ்யர்களுக்கு உண்டாகுமேயல்லாது ஸுலபமாய் ஏற்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டிருப்பதாலும் மகாபுண்யத்தால் கிடைக்கக்கூடிய ஸ்ரீமத்வமதக்ஞானத்தைப் பெற விவேகிகளான ஒவ்வொரும் எத்தனப்படவேண்டிய தவசியம்.

---

## ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

# அணுபாஷியம்.

---

4வது அத்யாயம்.

(முன் 50ம் பக்கம் தொடர்ச்சி.)

1. விஷ்ணுர்ப்ரம்ம ததாதாதேத்யேவம் நித்யமுபாஸனம்|
கார்யமாபத்யபி ப்ரம்ம தேன யாத்யபரோக்ஷதாம்||

நாராயணன் குணபரிபூர்ணன். அப்படியே ஆதானம் முதலியவைகளை செய்வதால் எல்லாவற்றிற்கும் யஜமானர் எனக்கும் யஜமானர் என்றிவ்வாறு தியானம் எல்லா காலத்திலேயும், மனஸ்தாபம் உபாதி முதலியவை வந்த ஆபத்காலத்திலேயும், அவசியம் செய்யப்படவேண்டும். அவ்வாறு தியானம் செய்வதால் விஷ்ணுவாகிய பரப்ரம்மம் அபரோக்ஷக்ஞானத்திற்கு எட்டுவார்.

2. ப்ராரப்த கர்மணோந்யஸ்ய க்ஞானதேவ பரிக்ஷய:|
அநிஷ்டஸ்ய உபயஸ்யாபி ஸர்வஸ்யான்யஸ்ய போகத:||

ப்ராரப்த கர்மத்தைத் தவிர்த்துள்ள ஆகாமிகர்மம் ஸஞ்சித கர்மம் இவைகளுக்கும் அபரோக்ஷக்ஞானத்திற்கு முன்னும் பின்பும் செய்த இவ்விருகர்மங்களுக்கும் அநிஷ்டமான புண்ய பாபங்களுக்கும் அபரோக்ஷக்ஞானத்தால் தான் நாசமோ சம்பந்தமில்லாமையோ உண்டாகிறது. இவைகளைத் தவிர்த்துள்ள ப்ராரப்த புண்ய பாபங்களுக்கும் இஷ்டமான புண்யங்களுக்கும் குரு பத்னி கமனம் முதலான மகாபாபத்திற்கும் அனுபவத்தால்தான் நாசமுண்டாகிறது.

3. உத்தரேஷூத்தரேஷ்வேவம் யாவத் வாயும் விமுக்திகா :|
ப்ரவிச்ய புஞ்ஜதே போகான் ததந்த: பஹிரேவ வா:||



மோக்ஷத்திற்கு போகக்கூடிய கருடமார்க்கம் சேஷமார்க்கம் இவைகளிலுள்ள வாயுபகவான் வரையிலுள்ள எல்லா தேவர்களும் ச்ருதி ஸ்மிருதிகளில் அவர்கள் ப்ரவேசம்செய்ய அதிஷ்டானமாய் சொல்லப்பட்டிருக்கும் அவர்களைவிட உத்தமர்களான தேவர்களில் ப்ரவேசம் செய்துதான், அந்த தேவதைகளில் உள்ளேயிருந்தோ வெளியேயிருந்தோ அவர்களின் இஷ்டப்படி போகங்களை அனுபவிக்கின்றனர்.

4. வாயுர் விஷ்ணும் ப்ரவிச்யைவ போகஸ்ஸைவோத்தரோத்தரம்
உத்க்ரம்ய மானுஷாமுக்திம் யாந்தி தேகக்ஷயாத்ஸுரா:||

வாயுபகவானே பவிஷ்யத்கல்பத்தில் வெளியே வந்திருந்து ப்ரம்ம பதவியை அடைந்து மகாலட்சுமியின் ஆக்ஞையால் விஷ்ணுவில் ப்ரவேசித்துதான் போகங்களை அனுபவிக்கிறார். சில அதிகாரிகள் அடுத்த கல்பத்தில் மோக்ஷத்திற்கு செல்லும் வாயு பகவான் வழியாய் அதாவது அடுத்த கல்பத்தில் வாயு பகவான் பிரம்மாவாய் ஆனபின், அவருடன் கூட மோக்ஷத்தை அடைந்தவர்களாய் போகங்களை அனுபவிக்கிறார்கள். போகம் என்பது அவர்களின் தாரதம்யத்தின்படி உத்தமாதிகாரிகளுக்கு அதிகமாக இருக்கிறது. அபரோக்ஷக்ஞானிகளான மனுஷ்யோத்தமர்கள் ஸுஷும்னா நாடிவழியாய் ப்ராணனை வெளிக்கிளப்பி மோக்ஷத்தை அடைகின்றனர். இந்திரன் முதலான தேவர்கள் அவர்களின் உத்தம தேவர்களின் தேகங்களில் பிரவேசித்து அவர்களின் சரீரம் லயமடைந்தபின் மோக்ஷத்தை அடைகின்றனர்.

5. அர்ச்சிராதி பதா வாயும் ப்ராப்ய தேன ஜனார்த்தனம்|
யாந்த்யுத்தமா நரோச்சாத்யா: பிரம்மாலோகாத்ஸஹாமுனா||

உத்தமமான ஞானம் பக்தி ப்ரஸாதம் இவர்கள் பெற்ற மனுஷ்யோத்தமர்கள் அதாவது சரீரம் இந்திரியம் இவைகளின் வெளியே வியாபித்திருக்கும் பகவானுடைய ரூபத்தை நேரில் காணும் அப்ரதீகாலம்பனர்கள் அர்ச்சிராதி மார்க்கத்தால் ப்ராணபதியான வாயுபகவானை அடைந்து சதுர்முகனும் லயமடையும் ப்ரளயகாலத்தில் மறுபடியும் விஷ்ணுலோகத்திலிருந்து ப்ரம்மலோகம் வந்து சதுர்முகனுடன் கூடி பகவானான விஷ்ணுவை அடைகின்றனர். சரீரத்திலும் இந்திரியங்களிலும் பகவத்ரூபத்தை காணும் ப்ரதிகாலம்பனர்களெனப் படுவர்களோ, அர்ச்சிராதி மார்க்கத்தால் வாயு பகவானை அடைந்து அவருடன்கூட ப்ரம்மலோகத்திற்கு வந்து அந்த பிரம்மாவுடன் சேர்ந்து நாராயணனை

6–7 யதா சங்கல்ப போகாஸ்ச சிதாநந்த சரீரிண:|
ஜகத் சிருஷ்ட்யாதி விஷயம் மஹாஸாமர்த்யமப்ரிதே||
யதேஷ்டசக்தியந்தஸ்ச விறுஸ்வாபாவிகோத்தமான்||
அனன்யவசகாஸ்சைவ விருத்திஹ்ராஸ விவர்ஜிதா:|
துக்காதி ரஹிதா நித்யம் மோதந்தே அவிரதம் ஸுகம்||

மேற்கண்ட எல்லாவகை முக்தர்களும் பகவானுடைய ஸங்கல்பத்தின்படி உண்டாகும் அவர்களின் இஷ்டப்படிக்குள்ள போகங்களை அநுபவிக்கிறவர்களாயும் ஞானம் ஆனந்தம் இவைகளை சரீரமாகக் கொண்டவர்களாயும் ஜகத்தை ஸிருஷ்டி செய்தல் முதலான பகவானுடைய மகாஸாமர்த்யத்தைத் தவிர அவர்களின் இஷ்டப்படிக்குள்ள பலவகை சாமர்த்தியம் உள்ளவர்களாயும், இயற்கையாய் அவர்களைவிட உத்தமர்களல்லாத அவர்களைவிட தாழ்ந்த ஸ்வபாவமுள்ளவர்களுக்கு கட்டுப்படாதவர்களாயும், முக்தின்தானங்களில் பலனைகச்செய்த பகவத் த்யானம் முதலான ஸத்கர்மங்களால் ஏற்கனவேயுள்ள மோக்ஷானந்தத்திற்கு விருத்தியோ, குறைவோ இல்லாதவர்களாயும், துக்கம் சிந்தை ஸந்தாபம் முதலான தோஷங்களில்லாதவர்களாயும், மீண்டும் திரும்புதலில்லாமல் அனந்தமான எந்தகாலத்திலேயும் நிரந்தரமாய் ஸுகமிருக்கும்படி சந்தோஷப்படுகின்றனர். (தொடரும்).

## விசேஷ தினங்கள்,

### கார்த்திக மாஸம்.

| | | |
|---|---|---|
| 20—11—36 | சுக்ரவாரம் | சிரவணம் உப. விஷ்ணு ப. உப. |
| 25—11—36 | புதவாரம் | ஏகாதசி உப. |
| 26—11—36 | குருவாரம் | உத்தான த்வாதசி மாலையில் துளஸி, விவாகம் க்ஷீராப்தி பூஜை. |
| 28—11—36 | சனிவாரம் | பௌர்ணமி கார்த்திக ஸ்நானம் பூர்த்தி விஷ்ணு ப. உப. |
| 9—12—36 | புதவாரம் | ஏகாதசி உப. |
| 13—12—36 | பானுவாரம் | அமாவாசை தர்சம், விஷ்ணு ப. உப. |

## விக்ஞாபனம்.

காலத்தின் கொடுமையால் இப்பத்திராதிபருக்கு அடிக்கடி ஜுரம் வந்து சரீர அஸ்வாதந்திரியம ஏற்படுவதன் நிமித்தம் பத்திரிகையை பௌர்ணமியன்று வெளிப்படுத்தமுடியாமல் காலதாமதம் உண்டாவதை குறித்து சந்தா[illegible]படியாயும், ஞாபகக் குறிப்பை அனுப்பும் [illegible]இருக்கும்படியாயும் கோர படுகிறது. [மா.—மா. ம

20868

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திக்விஜயம்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் சிலவடைந்து வருகிறபடியால் சிந்தி மறைந்திருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற்கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

த்வைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதராங்காசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவி[illegible]ஸவிலாஸம், கும்பகோணம்.